

கோவில் வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும்,
குளங்கரை வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

சிவத்திரு.

# கந்தையா பத்மநேசன்

(ஓய்வுநிலை இலங்கை வங்கி முதுநிலை முகாமையாளர்)

அவர்களின் திருவடிப்பேறு குறித்த



# பத்ம தீபம்

16.12.2022

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கோவில் வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ,
குளங்கரை வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

# சிவத்திரு.
# கந்தையா பத்மநேசன்

(B.Com, ஓய்வுநிலை இலங்கை வங்கி முதுநிலை முகாமையாளர்)

அவர்களின் திருவடிப்பேறு குறித்த

# "பத்ம தீபம்"

**16.12.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# காணிக்கை

இப்பூவுலகில் எம் நல் வாழ்விற்கும்

வளர்ச்சிக்கும் தன்னையே

மெழுகு வர்த்தியாக்கி உருகி, ஆலமரமென எம்

குடும்பத்தின் தலைவராய் திகழ்ந்து

அன்போடும், பண்போடும், பாசத்தோடும்

நல்லறிவு ஊட்டி எமக்கு நல்வழி காட்டி

தன் உறவுகளுக்கு என்றும் உறுதுணையாய்

நற்பணிகள் செய்து

நானிலத்தில் தனக்கென தடம் பதித்த

எங்கள் தெய்வத்தின் நினைவலைகள்

நெஞ்சில் சுமந்து இம் மலரை

அவர்தம் பாதக் கமலத்தில் அர்ச்சித்து

சமர்ப்பிக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



இங்ஙனம்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சிவபூமியில்
04.10.1948

சிவபுரத்தில்
16.11.2022

அமரர்

# கந்தையா பத்மநேசன்

## திதி வெண்பா

சீரார் நற்செய்கை ஆண்டுசேர் ஐப்பசித் திங்கள் தேய்பிறை
பேரார் பிறைநாள் எண்மைத் திதியில் பெரும் பேறடைந்தார்
ஊரார் போற்றும் உத்தமனார் பத்மநேசன் தன்பணி முடித்து
மூவார் கழலடிகள் சென்றிறைஞ்சி இன்புற்றார் என்று ஏத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தையா பத்மநேசன்
# (ஓய்வு பெற்ற முதுநிலை முகாமையாளர்)
# அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கட்டுடை மேற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசிரியர் நாகலிங்கத்தின் மகன் கந்தையா (சிரேஷ்ட எழுதுவினைஞர்) அவர்களுக்கும் புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓவசியர் தம்பிப்பிள்ளையின் மகளான இராசம்மாவுக்கும் மங்களா தேவி, தவநேசன் (இறைவரித் திணைக்களம்), சித்திராதேவி, பத்மநேசன், சிவநேசன் (ஹட்டன் நஷனல் வங்கி) ஆகிய ஐவர் உதித்தனர். அமரர் பத்மநேசன் 04-10-1948 அன்று தோற்றினார். அவர் தனது கல்வியை யா/புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்று ஆங்கிலத்தில் புலமையுள்ளவராகத் தேர்ந்தார். 1-9-1969 இல் தனது 21ஆவது வயதில் இலங்கை வங்கி யோர்க் வீதிக் கிளையில் தன்னை இணைத்துக் கொண்டார். பின்னர் ஹிங்குரானை, கல்முனை, யாழ்ப்பாணம் மேற்தர கிளை, ஊர்காவற்துறை, திருநெல்வேலி, 2ம் மேற்தர கிளை என்பவற்றில் சேவையாற்றி நன்மதிப்பைப் பெற்று 04-10-2008 இல் ஓய்வு பெற்றார்.

இவரது இளமைக் காலத்திலேயே தனது பெற்றோரை இழந்து பெருந்துயருற்றிருந்தார். அதன் பின்னர் இவரது சிறிய தாயார்களான ரோசம்மா, சிவபாக்கியம், தர்மாம்பிகை ஆகியோரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். இவரது சிறிய தாயாரான சிவபாக்கியம் வாமதேவனின் முயற்சியினால் 1980 இல் குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட சிவபாதசுந்தரம் (நிறுவை -அளவை பரிசோதகர், யாழ் மாநகர சபை) இரத்தினம்மா தம்பதியினரின் ஐந்தாவது மகளான சிவநேசராணியை (ஓய்வு நிலை ஆசிரியை, யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்) கரம்பற்றிக்கொண்டார். இவர்களிருவரின் இல்லறத்தின் பயனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌசல்யா, முகுந்தன் (பொறியியலாளர்) ஆகிய நன்மக்கள் இருவர் கிடைக்கப்பெற்றனர்.

இல்வாழ்வார்க்கு உரிய பண்புகளில் விருந்தோம்பல் சிறந்தது ஒன்றாகும். அமரர் கந்தையா பத்மநேசன் அவர்கள் வீட்டுக்கு வருவோர் யாராகினும் உணவருந்திச் செல்லுமாறு அழைப்பார். தன்னிடம் பண உதவி மற்றும் பிற உதவி கேட்டு வருபவர்களுக்கு இல்லையென்னாது தேவையான உதவிகளைச் செய்து அனுப்புவார். ஒவ்வொரு புதுவருட தினத்தன்றும் வீட்டிற்கு வருவோர் அனைவருக்கும் கைவிஷேடமாக புதுத்தாள்கள் கொடுத்து மகிழ்வார் .

தனது புதல்வி கௌசல்யாவிற்கு நவாலியை வசிப்பிடமாகக் கொண்ட பரராஜசேகரம் விஜயலக்சுமி தம்பதியினரின் மகன் நந்தீஸ் (தொழில்நுட்ப உதவியாளர் - T.O) என்பவரைத் திருமணம் செய்து வைத்து மகிழ்ந்தார் . மூத்த பேரப்பிள்ளையான அனுசயனில் அதீத அன்பு கொண்டு அவனது தேவைகளை தனது இறுதிக்காலம் வரை நிறைவு செய்தார். அவனது கல்வி முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டார். இறுதி நாட்களில் அனுசயன் தன்னுடன் இருப்பதையே விரும்பினார்.

அவரது இரண்டாவது பேரன் ஆராளன் பிறந்து சிறிது காலத்திலேயேயே இறந்ததையிட்டுப் பெரிதும் மனம் வருந்தினார். தனது மகன் முகுந்தனுக்கு கோண்டாவிலைச் சேர்ந்த யோகேஸ்வரன் ( Sri Lanka Telecom ) சுபாஜினி தம்பதியினரின் மகள் திவாகரியை ( SLT-MOBITEL) திருமணம் செய்து மகிழ்வுற்றதுடன் அன்பு பேரர்களான ஆதினி, ஆதிரன் மீது மிகுந்த பாசம் கொண்டார்.

அன்னார் 2008 இல் ஓய்வு பெற்றபின்னும் அதிகாலையில் எழும்பி பறவைகள், அணில்கள் போன்றவற்றிற்குத் தினமும் உணவளித்து மகிழ்வார். அத்துடன் காலையிலேயே தனது உறவுகள், நண்பர்கள், வங்கியாளர்கள் அனைவருக்கும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் அனுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதையும் மற்றவர்களது பிறந்தநாட்களை நினைவூட்டுவதையும் பெருவிருப்புடன் செய்துவந்தார். தனது நண்பர்களான சந்திரகுமார், தில்லைநாதன், லோகநாதன், பிரேமராஜன் அவர்களை வீட்டுக்கு அடிக்கடி வரவழைத்து ஒன்றுகூடி மகிழ்வார். நண்பர் சகாதேவனின் இல்லத்திற்கு அருகில் அமைந்துள்ள Happy Home இல் தனது நண்பர் குழாத்துடன் இடையிடையே கூடி இனிதே பொழுதைக் கழிப்பார். வங்கியாளர் நடராஜா அவர்களும் அன்னாரின் வீட்டிற்கு அடிக்கடி வந்து அவருக்குத் தேவையான உதவிகளை எல்லாம் உடனுக்குடன் செய்து கொடுப்பார். அன்னாருடன் நீண்டகாலம் வங்கியில் வேலைசெய்த வீரசிங்கம் அவர்களும் அவருக்கு இடது கையாகவே எப்போதும் இருந்து கொண்டார். அவரது நீண்டகால நண்பர்களான ரவி வேலாயுதபிள்ளை, சீவரட்ணம், நடனசிவம், கதிர்காமநாதன், பொன்ராஜா, ஸ்டான்லி செல்லக்குமார், பண்டாரநாயக்கா மற்றும் பலருடன் அடிக்கடி கதைத்து அளவளாவி வந்தார்.

இறுதி நாட்களில் தனது பெறாமக்களான பார்த்தீபன், பிரதீபன், சயந்தன் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு அவர்களுடன் தனது மன விருப்பங்களை பகிர்ந்து அவர்களின் உறுதிமொழிகளைக்கேட்டு மகிழ்ந்தார். நோயுற்ற போதும் வைத்தியசாலைக்குச் செல்ல அவர் விரும்பவில்லை. எனினும் பார்த்தீபனின் சொற்கேட்டு சிகிச்சைக்குச் சென்றார். அன்னாரின் ஒன்றுவிட்ட சகோதரி றுவானி அவரைப் பார்ப்பதற்காக கனடாவில் இருந்து வந்து இவருடனேயே கூடிய நேரங்களைக் கழித்து வந்தார். அவுஸ்திரேலியாவில் உள்ள ஒன்றுவிட்ட சகோதரிகள் சகுந்தலா, அருந்ததி, மேனகா அன்னாரின் 74 வது பிறந்த தினத்தை இவ்வருடம் கேக் வெட்டிக் கொண்டாடவேண்டும் என்று கட்டாயப்படுத்தி அதற்குரிய ஒழுங்குகளைச் செய்து அவரை மகிழ்வித்தார். அன்னார் தனது இறுதிக்காலத்தில் தனது மனைவியுடன் தனியாக வசிப்பதற்காக புதிய வீடொன்றைக் கட்டிக்கொண்டிருந்தபோது அதன் கட்டுமானப் பணிகளை அடிக்கடி சென்று மேற்பார்வையிட்டு மகிழ்வுற்றார். நியூசிலாந்தில் உள்ள அவரது மைத்துனி சிவநேசஜோதி (பேபி) மற்றும் பெறாமக்களான தர்சிகா, பிரதீபன் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாருடன் பொழுதைக் கழிக்க பயணத்தை முற்பதிவு செய்திருந்தவேளை திடீரென சுகவீனமுற்றார். அன்னாரின் இறுதிநாட்களில் செல்வராசா - சுதா குடும்பத்தினரும் குருபரனும் ஒரே குடும்பத்தினர் போல அவருடனேயே இருந்து பல ஒத்தாசைகளைப் புரிந்து வந்தனர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தாம் செய்த புண்ணியத்தின் பயனாக, நீண்டகாலம் நோயுற்று படுக்கையில் அல்லற்படாமல் தனது மருமக்களான மருத்துவர் அர்ஜூன், மருத்துவர் அகல்யன், பெறா மகளான மருத்துவர் பிரியவதனி அவர்களின் தீவிர கண்காணிப்புடன் மனைவி, பிள்ளைகள் சூழ இருந்து நமசிவாய மந்திரம் ஓதிக்கொண்டு இருந்தவேளை 16-11-2022 அன்று அதிகாலை 4.55 மணியளவில் சிவப்பேறு பெற்றார்.

ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் உள்ளத்திலிருந்து ...

எனது அன்பிற்குரியவரின் 42 வருட திருமண வாழ்க்கையில் நான் பெற்ற அனுபவங்களோ எண்ணிலடங்காது. அன்னாரின் மௌன மொழியைப் புரிந்து நடப்பேன். அன்னாருக்கு நான் வேலைக்குப் போவது விருப்பம் இல்லை. வீட்டில் இருந்து பிள்ளைகளை நல்லமுறையில் வளர்க்க வேண்டும் என்பதே அவரது எண்ணம். அதனால் எனது ஆசிரிய சேவையை இடையில் நிறுத்தி ஓய்வு பெற்றேன்.

அவரின் நற்பண்புகளில் பிறருக்கு உதவுதல் ஒன்றாகும். யாராவது பண உதவி கேட்டு வந்தால் இல்லை என்று கூற மாட்டார். எனக்குத் தெரியாமலே கொடுத்துதவுவார். உதவி பெற்றவர்கள் சிலர் மூலம் நாம் அறிந்து அவரிடம் கேட்டால், தனக்குக் கொடுத்துத் தான் பழக்கம் திருப்பிக் கேட்டுப் பழக்கம் இல்லை என்பார். அவர்கள் தானாகத் திருப்பிக் கொடுத்தால் மட்டுமே வாங்குவார். இது எனக்கு மனக்கஷ்டத்தைத் தந்தாலும் அவரின் பண்பை நினைத்துப் பெருமைப்படுவேன். இவருக்கு யாராவது உதவிகள் செய்துவிட்டு காசு வேண்டாமல் போனால் அவர்களது வங்கிக் கணக்கிலக்கத்தை அறிந்து அவர்களுக்கு கூறாமலே காசு போட்டுவிடுவார். அவர்கள் வீட்டிற்கு வரும்வேளை ஏன் ஐயா காசு வைப்பிலிட்டீங்கள் என்று கேட்கும் போது தான் நான் இவரின் செயலை அறிந்து மனத்திருப்தி அடைவேன் .

எனது பிறந்தநாள் வருவதற்கு ஒருமாதம் முன்பே எனக்குத் தெரியாமல் சேலை வாங்கி ஒளித்து வைத்துக் கொள்வார். பிறந்தநாள் அன்று காலையிலேயே வாழ்த்துத்தெரிவித்து அதனைத் தந்து என்னை அதிர்ச்சிக்குள்ளாக்குவார். அதிகம் கதைக்க மாட்டார். செயற்பாடுகள் தான் அதிகம். இவற்றை எல்லாம் என்னால் மறக்க முடியவில்லை. பிறப்போடு இறப்பு இணைந்தது எனினும் இவரின் இழப்பை என் மனம் ஏற்க மறுக்கின்றது. எம்மிருவருக்குமாக அமைக்கப்படும் புதியவீட்டில் சேர்ந்து வாழக் காலன் விரும்பவில்லை ஏன் தானோ !!!!

**அன்பு மனைவி,**

**சிவநேசராணி (லலிதா).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளின் உள்ளத்திலிருந்து...

அப்பா எங்கள் மீது மிகுந்த பாசமும் எங்கள் கல்வியில் மிகுந்த அக்கறையும் கொண்டவர். அப்பா வங்கிக்கு வேலைக்குச் செல்லும்போது சிறுவயதில் என்னையும் தம்பியையும் துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச் செல்வார். அப்பொழுது ஆங்கிலம் சொல்லித்தந்துகொண்டே போவார். பின்னர் அதனை திருப்பி எங்களிடம் கேட்பார். இச்செயல் என்றும் எங்கள் மனத்தில் நிலைத்திருக்கும்.

அம்மாவிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அம்மா தனியாக வெளியே சென்றாலும் இன்னும் வரவில்லை என்று பார்த்துக் கொண்டிருப்பார். நாங்கள் திருமணம் செய்த பின்பும் எங்கள் மீதும் எங்கள் குடும்பம் மீதும் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். மருமக்களையும் தன் பிள்ளைகள் போலவே மிகவும் நேசித்தவர். பேரப்பிள்ளைகளான அனுசயன், ஆராளன் (அமரர்), ஆதினி, ஆதிரன் மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டவர். இவற்றை எல்லாம் நினைக்கும் போது எமது மனம் வெதும்புகின்றது. அப்பா இன்னும் சிறிது காலம் எம்முடன் வாழ நாம் கொடுத்து வைக்கவில்லை. அப்பாவின் ஆன்மா இறைவனின் திருவடியில் இருந்து எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையில் நாம் மன அமைதி அடைகின்றோம்.

**உங்கள் பாசமுள்ள,**
**மகள் கௌசி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போய் வாருங்கள் அப்பா...

சிறுவயது முதலே கல்வியையும் பண்பையும் பழக்க வழக்கங் களையும் எமக்குச் சொல்லித் தந்தீர்கள்.

சித்திரை வருடப் பிறப்பிற்கு புதுத் தாள்களை அடுக்கிவைத்து வீட்டுக்கு வரும் அனைவருக்கும் கைவிசேடம் வழங்கி வந்தீர்கள். எனது திருமணத்தின் பின்னர் வந்த வருடங்களில் எனக்கும் புதுத்தாள்களை மாற்றித் தந்து அந்த வழக்கத்தைத் தொடரச் செய்தீர்கள்.

கொழும்பில் உங்கள் நண்பர்களின் வீட்டு நிகழ்வுகளில் நீங்கள் கலந்துகொள்ள முடியாத நேரங்களில் என்னை அந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளச் செய்து அவர்களுடனான உங்கள் நட்பை உறுதிப் படுத்துவீர்கள்.

பத்திரிகைகளில் வரும் குறுக்கெழுத்துப் போட்டிகளில் எமக்கு ஆர்வத்தைத் தூண்டுவதற்காக சரியான விடையை எமது பெயரில் எழுதி அனுப்பி , பரிசுத்தொகையைப் பெற்றுத்தருவீர்கள் .

நீங்கள் சாப்பிடும் அளவு உணவை விட இருமடங்கு உணவுகள், பழங்கள் பறவைகளுக்கும் அணில்களுக்கும் கொடுத்துவிட்டுத்தான் நீங்கள் உண்பீர்கள். பலவருடங்களுக்கு முன்பு வேறு வீடு மாறிச் சென்றபின்னும், பழைய வீட்டிலிருந்த அணில்கள், குருவிகள் பாவம் என்று அங்கு சென்றும் உணவு வைத்து வந்தீர்கள்.

கொழும்பு வாருங்கள் அப்பா என்று பலமுறை கேட்டும் யாழ்மண்ணை விட்டு வர விரும்பாததால் “பிறகு பாப்பம்” என்று கூறுவீர்கள்.

இரவில் தொலைபேசியில் கதைக்கும் போது "நீர் சாப்பிட்டீரா? திவாகரி சாப்பிட்டாவா? ஆதினி ஆதிரன் சாப்பிட்டுப் படுத்திட்டினமா?" என்று நெடுகிலும் கேட்பீர்களே அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நாட்களுக்கு முன் நீங்கள் சிறிது நோய்வாய்ப்பட்ட போது "இதுவரை இருந்தது எனக்குப் போதும். சிகிச்சைக்குப் போகச் சொல்லி என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம்" என்று கூறினீர்கள். சொல்லிச் சிறிது காலத்திலேயே எம்மை விட்டுச் சென்றுவிட்டீர்கள்.

நீங்கள் செய்துவந்த பல நல்ல செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்து வருவோம் அப்பா. எங்கிருந்தும் உங்கள் ஆசியுடன் எம்மைத் தொடர்ந்து வழிநடத்துங்கள்.

**அன்பு மகன்,**
**முகுந்தன்.**

## அன்புத் தாத்தா பற்றி...

எனது தாத்தாவை நான் என்றென்றும் மறவேன். அவர் என்னை பாடசாலையிலிருந்து வீட்டிற்கு கூட்டி வரும்போது எப்பொழுதும் என்னை Daily Food City க்கு முன்னால் இறக்கி விட்டு எனக்கு விருப்பமானவற்றை எல்லாம் வாங்கச் சொல்வார். நான் சந்தோசத்துடன் பொருட்களை தேர்ந்தெடுப்பேன். தாத்தா நோயுற்ற வேளையிலும் ஒருநாள் என்னை மாமாவின் மோட்டார் வாகனத்தில் TCT Food Cityக்கு என்னுடன் வந்து எனக்கு எது விருப்பமோ அதை வாங்கும்படி கூறி என்னை மகிழ்வித்தார். அவரை என்றும் மறக்கமாட்டேன். தனது கணனியில் வீடியோ கேம் விளையாட விடுவார். என்னை எப்போதும் "படியும் படியும்" என்று கூறுவார். தாத்தா என்மீது வைத்துள்ள அன்பை நினைக்க என் மனம் கலங்குகிறது. தாத்தாவை இனி எப்போ காண்பேன்.

**அன்பு பேரன்,**
**ந. அனுசயன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

மருமகன் பத்மநேசன் அமைதியானவர், நற்பண்புகள் கொண்ட குணசாலி. கடந்த நாற்பத்தி இரண்டு வருடங்களாக, எங்களுடைய குடும்பத்தில் ஒருவராக எங்களுடைய பூர்வீக நிலத்தில் அமைந்திருந்த வீட்டில் தனது அன்பு மனைவி லலிதாவுடனும், அன்புச் செல்வங்களான கௌசல்யா, முகுந்தன் ஆகியோருடனும் வாழ்ந்து வந்தார். எங்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகிவந்தார். நாங்கள் கனடாவிலிருந்து தொலைத்தொடர்பு சாதனத்தின் மூலம் அவர்களுடன் தொடர்பு கொள்ளும் நேரங்களிலெல்லாம் “ஒருமுறை இவடம் வந்து போகலாம் தானே” என்று மருமகன் பத்மநேசன் தனது முதல் வார்த்தையை ஆரம்பிப்பார்.

இறைவன் அருளால் கடந்த இரண்டாயித்துப் பதினெட்டாம்(2018) ஆண்டு நாங்கள் அனைவரும் இலங்கைக்குச் செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு சென்று அவர்கள் எல்லாரையும் சந்தித்து வந்தது , இப்போதைய நிலைமையில் மனத்திற்குச் சிறிது ஆறுதலாக இருக்கிறது . அவர் கூறிய வார்த்தையை நிறைவேற்றிவிட்டோம் என்பதுதான் மன ஆறுதலாக இருக்கிறது. மிகுந்த செல்வாக்குடன், தன்னடக்கமாக வாழ்ந்த நற்குணசாலியை நாங்கள் இழந்து விட்டோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**திருமதி. இராஜேஸ்வரி திருநாவுக்கரசு**
**மொன்றியால், கனடா,**
Montreal, Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்மநேசம் எனும் ஒரு வாழ்வியல் நெறி

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவதது ஆரம் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

அடியேன் சைவத்தின் வழி, சிவத்தின் வழி நின்று இயங்குவதால் வாழ்வதால் சிவத்திரு.கந்தையா பத்மநேசன் ஐயாவின் உயிர் திருவடிப்பேற்றினை இயற்கையாகப் பெற்றதால் அதன்வழி நோகாமல், இதனை ஒரு வாழ்வின் நிறைவுப் படியாகப் பார்த்து, அவரின் வாழ்வினைக் கொண்டாடும் நோக்குடன், வாழ்வில் அவரிடம் கற்றுகொண்டவை என்ன, பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அவரின் வழியில் அவர் செய்த நல்ல விடயங்களை தொடரவேண்டும் என்ற விண்ணப்பத்துடன் இதனை வரைகிறேன்.

நாங்கள் கூட்டுக் குடும்பம் என்று ஒரே வீட்டில் இல்லாவிட்டாலும், எங்கள் மூத்தோர் தங்கள் பெண்பிள்ளைகளுக்கு அருகருகில் வீடுகளைக் கட்டிக் குடியமர்த்தியதால் எல்லோரும் அயலவராய் வாழ திருவருள் துணை நின்றது.சிவபாதம் குடும்பத்தில் முதலாம் தலைமுறைப் பெயர்களை பார்த்தாலே சிவம் ஊறி நின்றது. எங்கள் அம்மப்பா சிவபாதம் என்றழைக்கப்படும் சிவபாதசுந்தரம், அம்மம்மா இரத்தினம்மா என்றழைக்கப்படும் உண்மையில் ஒரு இரத்தினம். இவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததன் பயனாய் பிறந்த ஆண் பிள்ளைகள் எல்லோரும் ஈசுவரன் என்ற பெயர் முடிவைத் தாங்கியும், பெண்பிள்ளைகள் சிவநேச என்ற ஆரம்பப் பெயரைத் தாங்கியும் வாழ்ந்தனர், வாழ்ந்து காட்டினர். இதில் இரண்டாவது பெண் பிள்ளையாகிய சிவநேசராணிக்கு கணவராய் வந்தார் பத்மநேசன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்



ராசம்மா

தந்தை



கந்தையா



மகனின் பட்டமளிப்பு விழாவின் போது

சகோதரனின் திருமண
நிகழ்வின்போது
சகோதரர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனின் திருமண நிகழ்வில் உறவினர்களுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மம் என்றால் தாமரை, நேசம் என்றால் அன்பு. பெயரிற்கு ஏற்றால் போல் தாமரை போல் அழகான மென்மையான மனதையும், பிற உயிர்களிடத்து பேரன்பும் கொண்டு விளங்கியது மட்டுமல்லாது வாழ்ந்தும் காட்டியவர் எங்கள் சித்தப்பா கந்தையா பத்மநேசன்.

பிறப்பிலேயே அமைதியானவராய்
பேருக்கேற்ற குணவானாய்
குடும்பத்தின் முதுகெலும்பாய்
உயிர்களிடத்தில் அன்பாய்
பழகுவதில் பண்பாய்
அன்பின் அத்திவாரமாய்
உதவுவதில் சிகரமாய்
பேசுவதில் மென்மையாய்
நட்பினிலே மேன்மையாய்
வாழ்வினிலே உயரமாய்
இறந்தபின்னும் வாழ்பவராய்

இன்றும் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் சிவத்திரு. கந்தையா பத்மநேசன் அவர்கள்.

சித்தப்பா பெரிதாக பேசமாட்டார். அமைதியாகவே சாதிக்கும் ஆற்றல் பிறப்பினால் கொண்டவர். ஆளுமை என்பது ஆரவாரத்தால் தான் காட்டமுடியும் என்ற கருத்தியலை உடைத்துப் போட்டவர். அலங்காரவளைவாக இல்லாமல் ஒரு அத்திவாரமாக திகழ்ந்தவர். பார்த்தால் சிறியவட்டத்தில் வாழ்பவர் போலத்தான் தெரிந்தார். ஆனால் அன்று சிவப்பேற்று விழாவில் தான் அவரின் வட்டத்தின் விட்டம் தெரிந்தது. எத்தனை உறவுகளை தன்னகத்தே கொண்டிருந்தார்.

இவரிடம் பல நற்பழக்கங்கள் இருந்தாலும், நான் எடுத்துக்கொண்டது காலையில் எழுந்து பறவைகளுக்கு உணவூட்டும் ஒரு சிறப்பு. சித்தாந்தத் தத்துவத்தில் உயிரினங்களில் எல்லாமே இறைவனிருக்கிறான். அதன் அடிப்படையில் பலவுயிர்களுக்கு காலையில் உணவளிப்பது என்பது எவ்வளவு சிறப்புவாய்ந்த செயல். இவரை அழைக்க எண்ணி இறைவன் அந்தப்பணியை என்னிடம் தந்தானோ தெரியவில்லை ஆனால் கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமாத காலமாக நானும் அதனை செய்துவருகிறேன். தினமும் முப்பது, நாற்பது உயிர்களுக்கு உணவளிக்கும் ஆனந்தம்.

வந்தவர்கள் அனைவரும் சென்றுதான் ஆகவேண்டும். பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு. ஆனால் நாங்கள் விலங்குகள் போல் அல்லாது ஆறறிவுடன் பிறக்கிறோம். ஆகவே அதனைப் பயன்படுத்தி எப்படி உலகியலில் நிற்கிறோமோ, அதுபோல் அதனைப் பயன்படுத்தி இறைவனையும் அறியவேண்டும். வாழ்க்கைப் பயணம் தான் முடியும் ஆனால் உயிரின் பயணம் தொடரும். அந்த உயிரின் ஈடேற்றத்திற்கு நல்லவை செய்வோம். நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்க வேண்டும். சுயநலத்துடன் சுடுகாடு சென்று எரிந்து நீறாகாமல், பிறர் நலத்துக்கும் வாழ்ந்து வெந்தபின்னும் வாழ்வோம். இல்லையேல் திருமூலர் சொல்வதுபோல் தான் எல்லோரின் பயணங்களும் முடிவடையும்.

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே - திருமந்திரம்

சித்தப்பாவின் உயிர் ஆறுதல் அடைந்து, சிவப்பரம்பொருளுடன் ஒன்றி மீண்டும் பிறப்பில்லாத பேரின்பப் பெருவாழ்வினை பெறவும் அல்லது மீண்டும் பிறப்பெடுத்தால் அந்த உயிர் ஒரு நல்ல சட்டையை எடுத்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் சிவத்தின் திருவடியில் சென்று சேரவும் எல்லாம் வல்ல கொக்குவில் தென்னாடு ஐம்பூதநாதப்பெருமானின் திருவடி பணிந்து விண்ணப்பம் வைக்கிறேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

**தென்னவன் பார்த்தீபன்,**
**பெறாமகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தப்பா

கனவான், கண்ணியவான், நேர்மையாளன், பண்பாளன், நல்ல நண்பன், நல்ல கணவர், நல்ல தந்தை, சிறந்த முகாமையாளன், நல்ல ஆளுமையாளன், சிறந்த நாட்டுப்பாற்றாளன், மனித நேயம் மிக்கவர், ஆறு அறிவற்ற உயிர்களையும் நேசிப்பவர், பழக இனிமையானவர் இன்னும் பல இவற்றுக்கெல்லாம் உரித்துடையவர் ஒருவர் என்றால் நம்புவது கடினமான சூழலில், அப்படி ஒருவர் பிறந்து வாழ்ந்து மடிந்தார் என்றால் அது சித்தப்பா தான்.

ஏதோ நினைவுமலருக்காக எழுதிய புகழ்மாலை அல்ல, சூரியன் கிழக்கில் உதிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு சத்தியமான வார்த்தைகள்.

இப்படி நான் உங்களுக்காக எழுத வேண்டி வரும் என்று நினைக்காத சில வாரங்களுக்கு முன்னர், ஒன்றாக புன்னாலைக்கட்டுவன் கோயில் திருவிழாவில் கலந்து கொண்டதும், உங்கள் வீட்டு மொட்டை மாடியில் உங்கள் நண்பருடன் பழைய திருநெல்வேலி நினைவுகளை பகிர்ந்து கொண்டதும், பல்வேறு அரசியல் பொருளாதார வாழ்வியல் நிகழ்வுகளை அளவளாவிய நினைவுகள் காயும் முன்னரே, உங்களை இழந்து இப்படி எழுத வேண்டி வரும் என்று நினைத்திருந்தால், இன்னும் கொஞ்ச நேரம் பேசியிருக்கலாமோ.?

சிறு வயதில் கைவிசேடத்துக்கு தரும் புதுக்காசில் உங்கள் மனதின் தூய்மையை பார்த்திருக்கிறேன், வாராந்தம் நீங்கள் வாசிக்கும் Reader's Digest ஆங்கில வாராந்த இதழில் உங்கள் ஆங்கில புலமையை பார்திருக்கிறேன், "அவனுக்கு சாப்பாடைப் போடு" என்று லலிதா சித்திக்கு வழங்கும் கட்டளையில் விருந்தோம்பலை பார்த்திருக்கிறேன், தேசிய செய்திகளை கேட்டுப்பூரிப்பதில் உங்கள் நாட்டுப்பற்றை பார்த்திருக்கிறேன், திருநெல்வேலி இலங்கைவங்கி கிளையில் உங்கள் ஆளுமை, நேர்மையை பார்த்திருக்கிறேன், நீங்கள் படித்தவற்றை பகிர்வதில் உங்கள் சமூக அக்கறையை பார்த்திருக்கிறேன், பிந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்கள் என்றாலும் உங்கள் வாழ்த்தில் இருக்கும் ஆத்மார்த்தத்தை பார்த்திருக்கிறேன், கௌசி மற்றும் அனுஷயன் மீது காட்டும் அக்கறையில் உங்கள் உறவின் மகிமையை பார்திருக்கிறேன், "லலிதா சித்தியைப்பார்த்துக்கொள்" என்று கையைப்பிடித்து சாமியறையில் கேட்டபோது உங்கள் காதலை பார்த்திருக்கிறேன், உங்கள் இறுதி ஊர்வலத்தில் உங்களோடு பழகியவர்கள் உரையை கேட்டபோது உங்கள் நட்பின் வலிமை, நேர்மை, வள்ளல் குணங்களை பார்த்திருக்கிறேன். இவ்வளவும் பார்த்த எனக்கு, உங்களுக்கு வைத்தியசாலை தீவிர சிகிச்சை பிரிவில் கடைசியாக தொலைபேசியில் பேசியபோது உறுதியளித்தபடி நேரில் ஒருமுறை மீண்டும் பார்க்க கிடைக்கவில்லை.

இந்த குற்ற உணர்வுகூட என்னில் நிலைக்கக்கூடாது என்று தான் என்னவோ சுடலைகாப்பான் கூட உங்களின் இரண்டாவது மகனாக உங்களுக்கான இறுதி கிரிகைகளை செய்து இந்த பிறவிக்கான பெரும் பேறை அடையச் செய்துவிட்டீகள்.

வாழ்வியலின் அடையாளத்தை ஒரு புன்சிரிப்பில் காட்டிய ஆசான் நீங்கள், உங்கள் சொந்தப்பிள்ளை போல பாசம் காட்டினீர்கள், "நீ கேட்டால் தான் இந்தியா வருவார்" என்று லலிதா சித்தி என்னை உங்களிடம் கேட்க சொல்லி, நான் கேட்டு மறுக்காமல் இந்தியா வந்து என்னை பார்த்தீர்கள், உங்களுடன் பேசினால் தான் அப்பாவுக்கு ஆறுதலாக இருக்கும் என்று முகுந்தனே சொல்லும் அளவுக்கு என் பேச்சுக்கு மரியாதை தந்தீர்கள், இன்னும் இதில் எழுத முடியாத அளவுக்கு பல்வேறு இன்னலான காலகட்டங்களில் என்னில் பாசம் காட்டினீர்கள்.

ஒரே ஒரு முறை மீண்டும் எனக்கு சித்தப்பவாக "பிரதி" என்று கூப்பிட மாட்டீங்களா என்று, நீங்கள் தானியமிட்ட பறவைகளுடன் இந்த ஜென்மத்துக்கும் நான் காத்திருக்கிறேன்.

**(பெறா)மகன்,**
**பிரதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தப்பா! என் நினைவிலிருந்து...

தனக்கென ஓர் தனித்துவத்தையும், தனி மரியாதையையும் ஏற்படுத்தவல்ல புன்சிரிப்பு, மௌனத்தையே பெரும்பாலும் பல வார்த்தைகளுக்குப் பதிலாக வைத்திருந்தபோதும், செயல்வடிவில் நீங்கள் ஆற்றிய சேவை மறைந்த பிறகும் பலரது மனதில் வாழ்ந்துகொண்டேதான் இருக்கும். ஒரு தொலைபேசி அழைப்பிலேயே, முடியாத காரியத்தையும் நிறைவேற்றும் அளவிற்கு உங்கள் மீது ஓய்வெடுத்தாலும் தனிமரியாதையை தற்காலத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும் இலங்கை வங்கி ஊழியர்களும் வைத்திருப்பது என்பது எனக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி ஏழை, பணக்காரன் எனப் பிரித்துப் பார்க்காது எல்லோரையும் சக மனிதனாக நேசித்ததை உங்களது அகமகிழ்ந்து உணவளிப்பது, வரவேற்பது முதற்கொண்டு கண்கூடாகக் கண்டுமகிழ்ந்தேன். என்னைப் பொறுத்தவரை உங்களிடமிருந்து பின்பற்ற வேண்டிய பல விடயங்களை இன்னும் வரிசைப்படுத்திக்கொண்டே இருக்கிறேன். இளவயதில் என் தந்தையை இழந்தேன். அதன் பிறகு கற்றுக்கொண்டவையை விட, உங்களது இழப்பு மேலும் பல புதிய பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறது. உண்மையில், பிரியமானவர்களின் இழப்பு என்பது வாழ்க்கையில் நாம் இதுவரை கற்றிராத பல புதிய பாடங்களை, தத்துவங்களை சுலபமாக உணர்த்திவிட்டுச் சென்றுவிடும் என்பதையும் நான் எனது பெற்றோரை இழந்த பின்னர்தான் அனுபவரீதியாகவும், ஆத்மார்த்தமாவும் உணர்ந்து கொண்டேன்.

காயமே இது பொய்யடா வெறும்...
காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண்பாண்டம் ஓடடா!

என்று சித்தர் ஒருவர் பாடியது தான் தற்போது நினைவில் வந்து செல்கிறது. நல்ல மருமகனாய், நல்ல மகனாய், அண்ணனாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையால், உறவினராய், முகாமையாளராய் உங்களது முழுத் திறமையையும், ஆளுமையையும் வெளிப்படுத்தியதோடு எல்லோராலும் மிக எளிதில் இருந்துவிட முடியாத ஒன்றாகிய இவற்றிற்கும் மேலாக நல்ல மனிதனாக இருந்துவிட்டுச் சென்றீர்கள் என்பதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

பலரும் பலரைப் பிரதிபலித்தே வாழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் நீங்கள் பல்வேறு விடயங்களிலும் உங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்தி இருப்பது என்னை நெகிழவைக்கிறது. உதாரணத்திற்கு நீங்கள் பரிமாறும் பிறந்தநாள் வாழ்த்தையே கூறலாம். ஒரு செய்தி, தத்துவங்களுடன் கூடிய உங்கள் பிறந்தமண்ணை ஆளும் நல்லூரான் துணைகொண்டு நீடுழி வாழ வாழ்த்தும் தன்மை நான் இதுவரை யாரிடமும் கண்டதில்லை. நீங் கள் தெரிந்த, அறிந்த பலவியங்களை பலருடன் பகிர்வதில் இருக்கும் முனைப்பே உங்களை இந்த நிலைக்கு உயர்த்தி இருக்கும் என்பதை ஆணித்தரமாக நம்புகிறேன்.

இருக்கும் இடமே தெரியாமல் வாழ்ந்தாலும், சித்தப்பா நீங்கள் எல்லோது மனதிலும் தனி இடம் பிடித்துவிட்டுத்தான் சென்றுள்ளீர்கள். "பறவைகளுக்கு உணவளிப்பது" என்பது யாராலும் எளிதில் செய்துவிட முடியாது. எந்தளவிற்கு ஜீவராசிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தீர்கள் என்பதை எடுத்துக்காட்ட இதை விட வேறொன்றும் தேவையில்லை.

வீண் புரளி பேசுவது. ஒருவரைப் பற்றிய தப்பான அபிப்பிராயத்தை மற்றவர் மத்தியில் ஏற்படுத்துவது போன்ற கீழ்த்தரமாக எண்ணும் சிந்தனையின்றி, சிறந்த பண்பாளனாக காலஞ்சென்ற இரத்தினம்மா-சிவபாதசுந்தரம்(அம்மம்மா - அம்மப்பா) அவர்களின் தவப்பயனாகக் கிடைத்த நல்மருமகனாய் 42 வருடங்கள் துணைவியாருடன் வாழ்ந்து காட்டியது எனக்கு மேலும் பெரும் மதிப்பை உங்களின்மேல் ஏற்படுத்துகிறது.

தன்னலம், சுயநலம் என்பதன் அர்த்தமே புரியாது, உதவி என்று நாடி வந்தவர்களுக்கு கூடுமானவரை உதவிக்கரம் நீட்டியதை நான் அறிவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி எல்லாம் ஒருவருக்கு உதவி செய்யலாம் என்று சிந்திப்பதில் உங்களை யாரும் விஞ்சிவிட முடியாது. ஒரு கையால் கொடுப்பதை மற்றக் கையே அறியாது என்பார்கள். அது நீங்கள்தான். நீங்க மட்டும்தான் சித்தப்பா! தமிழர் பண்பாட்டையும் தமிழையும் தமிழ் இனத்தையும் தீவிரமாக நேசித்தீர்கள். நீங்கள் எப்படி எல்லாம் வாழ்ந்தீர்கள் என்பதை மிகச்சுருக்கமாக எழுதி முடிப்பது என்பது இயலாத ஒன்று. இருப்பினும் இரத்தினச் சுருக்கமாக உங்களை வெளிப்படுத்தியுள்ளேன்.

உங்களுடன் இன்னும் கொஞ்ச நாட்களேனும் வாழ்ந்து விட எண்ணிய உங்கள் அன்பு மனைவி எனது சிறியதாயை ஏமாற்றிவிட்டுச் சென்றதுதான் எனது ஆறாத்துயர். எனினும், உங்களுடைய ஆத்மா அவவிற்கு ஆறுதலையும், வழிநடத்தலையும் என்றும் வழங்கும் என்பதுடன் உங்களது ஜீவாத்மா எம்மை எல்லாம் வழிநடாத்துகின்ற, அண்ட சராசரங்களையும் ஆளுகின்ற எல்லாம் வல்ல பரம்பொருள் அப்பன் ஈசனின் பாதார விந்தங்களைச் சென்றடைந்து, மீண்டும் பிறந்து உழலும் மாந்தரைப்போல் அல்லாது மோட்சம் என்னும் நற்பேறை அடைந்து பெருவாழ்வை அடைந்து பரமாத்வாக வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**பெறாமகள்,**
**தர்ஷி.**

Success is the child of drudgery and perseverance. It cannot be coaxed or bribed pay the price and it's yours

***- O.S.Marden***

Every saint has a past and every sinner has a future

***– Oscar Wilde.***

It's not where you start – it's where you finish that counts

***– Zig Ziglar.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

பத்மநேசன் மாமா என்றவுடன் நினைவுக்கு வருபவை சிரித்த முகம், வாஞ்சையுடன் அணைக்கும் கரம், உபசரிக்கும் நற்குணம். அவரை அறிந்த அனைவருக்கும் அவரின் விருந்தோம்பல் பற்றி நன்கு தெரியும். வீட்டுக்கு யார் வந்தாலும் உவகையுடன் உணவளித்து மகிழ்வார். நாம் யாழ்ப்பாணம் செல்லும் போதெல்லாம் அவரின் வீட்டுக்குச் சென்று நீண்டநேரம் அளவளாவி பசியாறுவோம்.

சிறுவயதில் வருடப்பிறப்பு என்றால் கொண்டாட்டம். அதில் முக்கியமானது கைவிசேடம். பத்மநேசன் மாமாவின் கைவிசேடம் என்றால் அதிவிசேடம். ஏனெனில் அவர் தரும் நாணயத்தாள்கள் புதிதாக அச்சிடப்பட்டவை. அவர் வங்கியில் இருந்து சுடச்சுடக் கொண்டுவரும் தாள்களில் புதிய வாடை வீசும். இதற்காகவே நாங்கள் காத்திருந்த நாட்கள் இனிமையானவை.

அவர் கொழும்புக்கு வரும் நாட்களில் அநேகமாக நான் கீழே சென்று கதவைத் திறப்பேன். அவ்வேளை அன்புடன் பரீட்சைகள் மற்றும் பெறுபேறுகள் பற்றி உரையாடுவார். கதைப்பது குறைவு என்றாலும் அக்கறையுடன் உரையாடுவார். இப்பிடி ஒரு நல்ல மனிதரை காண்பது இந்த இயந்திர மயமாகிப் போன உலகில் மிக அரிது.

இறுதியாக தொலைபேசியில் உரையாடும்போது "எப்ப வாறீர்" என்று கேட்டார். நானும் அடுத்த வருடம் வருகிறேன் என்றேன். அதற்குள் அவசரப்பட்டுச் சென்றுவிட்டார். இனி எங்கே எப்போ எப்பிடி உங்களை மாதிரி நல்ல உள்ளம் கொண்ட மனிதரைக் காண்பேன் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

பிறந்தநாள், பண்டிகைகள் அனைத்துக்கும் தவறாது வாழ்த்துக்கள் அனுப்புவார். தனது நண்பர்களின் பிறந்த நாட்களையும் சிறப்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுவார். போய் வாருங்கள் மாமா. சிறப்பாக வாழ்ந்த மாதிரி சிறப்பாகச் சென்று சிவனை அடையுங்கள். எப்போதும் எங்கள் பிரார்த்தனைகளில் நீங்கள் சிவகதி அடைய பிரார்த்திப்போம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வாக்குக்கு இணங்க, இங்கும், அங்கும், எங்கும் நீங்கள் சிறப்பாக வாழ்வீர்கள்.

**மருமகன்,**
**இராஜேஸ்வரன் திலீபன்.**

Enthusiasm is contagious. Be a carrier

***– Susan Rabin***

The distance between insanity and genius is measured only by success

***– Bruce Fierstein***

Everything that happens to us is a reflection of who we are

***– Deepak Chopra***

Happiest are the people who give most happiness to others

***– Dennis Didero***

Rather fail with honour than succeed by fraud

***– Sophocle***

Make the most of yourself, for that is all there is of you

***– Ralph Waldo Emerson.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பின் சித்தப்பா

சித்தப்பா என நான் அழைக்கும் ஜீவன், பெருவாழ்வு வாழ்ந்து இன்று எமை விட்டு போய்விட்டார். இரத்தமும் சதையுமாக அவர் இன்று எம்முடன் நடமாடாவிட்டாலும் என்றும் எம்முடனே வாழ்கிறார். உள்நாடு, வெளிநாடு வாழ் உறவுகள் மற்றும் நட்புகளின் வங்கியல் தேவைகளுக்கு எல்லாமாகி இருந்தவர், இறந்தும் உதவிசெய்கிறார், உதவி செய்து கொண்டே இருப்பார். காலத்தை கடந்தும் தனது சேவையால் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

எனது வாழ்வில் பசுமையாக உள்ள இரு நிகழ்வுகளை இங்கு சொல்லவிரும்புகிறேன். எமது அம்மம்மா இறந்திருந்த நேரம், சிறுவர்களாகிய எமக்கு விளையாட்டு சாமான் வேண்டிக்கொண்டு வந்து தந்தார் (1992 - ஊதா நிற பாயும் தவக்கை) இறப்பு வீட்டின் அழுகைக்கு மத்தியில் நாம் அதை விளையாடித்திரிந்தோம். அன்று எமை ஆற்றுப்படுத்த நினைத்தமை பின்நாளில் எமக்கு விளங்கியது.

கொடும் போர் சூழலில் தம்மோடு கூட வேலை செய்த ஊழியரை வீட்டுக்கு அழைத்து உபசரித்து ஆங்கிலம் கற்பித்து அவரது பணி நிரந்தமாக உதவிசெய்தார். அதன்மூலமாக அவரது குடும்பமும் சுற்றமும் சமூக அடுக்கில் முன்னேறியது. சிறுவனாக இருந்த எனக்கு இது பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இவரது வாழ்வு நமக்கு ஓர் பாடம்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”

**பெறாமகன்,**

**ஜெயபாலன் சுஜீவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Big Brother

Pathuman Anna, I really miss you a lot. My mind still can't accept that you're no longer with us. You were like a big brother to me. I still remember how you used to take us to movies and other forms of entertainment, to the temple, and buy us snacks when we were children. Whenever I go to Sri Lanka, I'm always excited to see you and spend time with you. In our last days together, you spoke about discipline and joked around. Our mouths may say goodbye, but you'll always be in our hearts. Rest in peace, Pathuman Anna.

***Loving Sister,***
***Ruwani Jegatheesan.***

Dream the dreams that have never been dreamt

– ***David Bower***

A friend is a present you give yourself

– ***Robert Louise Stevenson***

To believe a thing impossible is to make it so

– ***French Proverb***

You can tell the character of every man when you see how he receives praise

– ***Seneca***

To get the full value of joy you must have somebody to divide it with

– ***Mark Twain***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுமன் அண்ணா

இந்தப்பதிவில் பதுமன் அண்ணனுடனான எனது நினைவுகளை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பதுமன் அண்ணா ஒரு புனிதமான ஆத்மா. எங்கு யாருக்கு உதவி தேவைப்படுகின்றதோ, அதை மறுக்காமல் செய்யும் மனமுடையவர். அவர் என்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் எனக்கு ஒரு அண்ணனாக என்னுடன் பயணித்தவர்.

அவர் தனது இறுதி மூச்சு இருக்கும் வரை பல நல்ல தகவல்கள், மற்றும் பிறந்தநாள் வாழ்துகளை மற்றவர்களுக்கு Viber மூலம் வழங்கியவர். ஒவ்வொரு முறையும் அவருடன் தொலைபேசியில் கதைக்கும்போதும் அவரின் முதற் கேள்வி எப்படி Rose aunty? அவர் அம்மாவின் இறுதி சமயக்கிரியைகளை அம்மாவின், Sri Lanka, Temple road வீட்டில் செய்தவர். அவர் எமது அம்மாவின் கடமைகளை தான் இந்த உலகத்தை விட்டுச் செல்லும் முன் செய்துவிட்டு சென்றுள்ளார்.

அவர் தனது பெரும்பாலான கடமைகளை இந்த உலகத்தில் செய்துவிட்டுத்தான் போகிறார்! எமக்கு பதுமன் அண்ணாவின் கடைசி பிறந்தநாளை கொண்டாட வாய்ப்புக் கிடைத்தது.

Miss You!!

Good bye Pathuman Anna!!!

**அருந்ததி ராஜ்சந்திரன்.**

Ideologies separate us. Dreams and anguish bring us together

***–Eugene Ionesco***

Adopt the pace of nature, her secret is patience

***–Ralph Waldo Emerson***

Your sacred space is where you can find yourself again and again....

***–Joseph Campbell***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Beautiful Soul

Pathuman Anna is one of the caring, kinder and gentler person in our family. We can count on him in challenging and difficult times; receive moral and his expert support. When we were young and after our family lost my only brother, Pathuman Anna became our warm big brother; guiding and advising us through our childhood.

Pathuman Anna developed a special bond with our ammah (Rose aunty). He was deeply saddened by the loss of my mother, when she passed away in last June. My mother and Pathuman Anna had a very special mother-son bond which flourished with shared family values. Our families have lost the most thoughtful and charismatic people this year.

Pathuman Anna had a generous spirit in helping people, especially the most vulnerable people in the community. As a wise person, using his power and professional status, he empathetically elevated people around him by guiding them and supporting them. Pathuman Anna showed great compassion to all living beings; cared for them tenderly, including birds, and animals. We will dearly miss you Pathuman Anna. May his beautiful soul rest in peace.

***Loving cousin,***
***Menaka Rajmohan,***
***from Australia.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rest in Peace Uncle.

Pathmanesan uncle is one of my good relations, and like a good friend. He always talks to me as a motivation, and helps with my higher studies and financial needs. I remember he was very helpful during my mother, father, and grandmother's funerals. I will never forget Pathuman uncle. He recently called me to ask about my brothers and what they are doing. Rest in Peace Uncle.

*Ukenderan Ramanathan*

# அன்பான எங்கள் பதுமன் மாமா...

அமைதிக்கு இலக்கணமாகவும் அடக்கத்தின் இருப்பிடமாகவும் பண்பில் பெருந்தகையாகவும் பாசத்தின் உறைவிடமாகவும் எம்மோடு இருந்தவர் பதுமன் மாமா.

எமது தாய், தந்தைக்கு அடுத்தபடியாக எமக்கு நல்லதே நடக்க வேண்டும் என்று மனதார நினைப்பவர்களிலும், வாழ்த்துவோர்களிலும் எங்களைப் பொறுத்தவரை பதுமன் மாமாவும் ஒருவர்.

நாம் அறியக்கூடிய வயதில் நேரில் கண்ட பெரும் உதவியாக நாட்டின் போர்க்கால சூழ்நிலையில் ஊரடங்கு பிறப்பித்திருந்த வேளையில் எமது தந்தையாரின் இறுதிச் சடங்கினை அவரது ஊரில் செய்யக்கூடியவாறு எங்களுடன் கூட இருந்து உதவி செய்தவர் பதுமன் மாமா.

எமது ஒவ்வொரு பிறந்தநாளின் போதும் வாழ்த்துச் செய்தியுடன் மகான்களின் கருத்துக்களையம் இணைத்து நல்வழிப்படுத்தியவர். அதுமட்டும் அல்லாது உறவினர்களை viber குழுமத்தில் இணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல உறவினர்களும் ஒன்றாக ஒருவருடன் ஒருவர் பழக வேண்டும் என்ற நல்ல எண்ணமுடையவர்.

ஒவ்வொரு சித்திரைப் புத்தாண்டின் போது கைவிசேடம் வழங்குவதற்காகவே எம்மை வீட்டிற்கு அழைப்பார். அது நாளடைவில் எதிர்பார்ப்பாகவே எமக்கு அமைந்து விட்டது. பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி வருவதற்கு கொஞ்ச நேரம் தாமதித்தால் கூட ஏன் இன்னும் பதுமன் மாமாவின் வாழ்த்துச் செய்தியைக் காணவில்லை என்ற ஏக்கம் இருக்கும்.

இறப்பதற்கு மூன்று தினங்களுக்கு முன்னதாக நானும் அம்மாவும் சென்று அவரைச் சந்தித்து இருந்தோம். எம்முடன் நன்றாக உரையாடிக் கொண்டிருந்தார். இப்போது அதை நினைக்கும் போது நாங்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று தான் கூற வேண்டும், அவரை சந்திக்க வாய்ப்பு கிடைத்தமைக்கு.

பதுமன் மாமாவுக்கும் எங்களுக்குமான உறவு என்பது எமது தாய் வழி பந்தம் என்பதை விட, எமது அப்பாவின் நெருங்கிய நண்பரும் கூட. இன்னும் கூறிக்கொண்டே போகலாம்.பக்கங்கள் போதாது. மண்ணில் அவரது பூவுடல் மறைந்து விட்டாலும், அவரது அன்பான கனிவான வார்த்தைகள் "ம்ம்ம் என்ன செய்கிறீர்", "என்ன கவனிக்கிறீர் இல்லை" மறக்க முடியாதவை.

நீங்கள் காட்டிய பாசம், அக்கறை எங்கள் மனதிலிருந்து ஒருபோதும் மறைவதில்லை. தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லூர் முருகப் பெருமானை வேண்டுகிறோம்.

**என்றும் உங்கள்,**

**சுமி, மகிழினி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அனுபவம்

வணக்கம், நான் பாலகுமார் ராஜரத்தினம், திருமதி லலிதா பத்மநேசன் எனது மச்சாள். எனக்கு திரு பத்மநேசன் அவர்களை கொஞ்சமாகத்தான் தெரியும், அமைதியானவர் குடும்பப்பொறுப்பானவர் என்று. ஆனால் ஒரு சம்பவம் எனக்கு நடந்தது வாழ்நாளில் மறக்கமுடியாது....

நான் இந்தியாவில் படித்தேன் அப்போது ஒருமுறை விடுமுறைக்கு இலங்கை வந்தபோது கொழும்பில் கடவுச்சீட்டு புதுப்பித்தலுக்காக எனது நண்பனுடன் தங்கியிருந்தேன், ஒருநாள் நான் தனியாக அறையில் இருந்தபோது, நண்பன் பல்கலைக்கழகம் சென்றுவிட்டார், எனக்கு எனது அப்பாவின் ஆஸ்துமா வருத்தம் அப்போது இருந்தது, அன்று கொஞ்சம் அதிகமாக இருந்தது அறைக்கு வெளியில் வந்து பார்த்தேன் ஒருவரும் இல்லை (கைத்தொலைபேசி இல்லாத காலம்) திரும்ப அறைக்கு வந்தேன், இருமல் சத்தமாகவும் அதிகமாகவும் இருந்தது. நான் சத்யாசாய்பாபாவை நம்புபவன், கடவுளை நினைத்தபடி திருநீறு பூசினேன், திடீரென்று அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. கதவை திறந்தேன்.திரு பத்மநேசன் வாசலில் நின்றார். அவர் என்னை வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்று வைத்திய உதவி பெற்றுத் தந்தார்.

அவர் எனது நண்பனின் அறைக்கு அடுத்த அறையில் இருந்தார், சத்தம் கேட்டு வந்தார் போன்ற விபரங்கள் பின்புதான் அறிந்தேன். கடவுள்தான் அவரை அனுப்பியிருந்தார், அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன். இந்தசம்பவம் எனது வாழ்நாளில் மறக்கமுடியாதது.

**பாலகுமார் ராஜரத்தினம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Doyen of the chosen Field

I knew Mr.Pathmanesan when I was about 28 years old ( 1962). Before that year, I knew nothing about him. He happened to be a relative of my wife Kamaladevi who at that time took me to his house. Pathmanesan's mother's sister Mrs Gurunathan happened to be my wife's aunt.

Pathmanesan was very methodical in his work in the bank. His excellent service to the customers won their admiration and his performance in the bank helped him to rise to the position of manager,BOC.

After retirement, he spent his time on reading, tackling crossword, puzzle and helping society, while Mrs Pathmanesan, a devotee of Nallur Murugan, as a freelance Tamil writer wrote to Tamil newspapers.

Both of them attached to each other like flower and fragrance, led a happy life with their children. Their sociable nature gave them a contented life and endeared them to all and sundry. He helped people who needed help and I am glad that he helped me too.

May Mr. Pathmanesan's soul rest in peace at the lotus feet ( gj;k ghjq;fs;) of the Almighty lord.

***T. Sreenivasan (A relative).***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY BEST FRIEND PATHMANESAN

I first met Pathmanesan in August of 1969 when I joined the Bank of Ceylon. Pathmanesan had joined the Bank a few weeks earlier. Both worked at the same branch, The York Street Branch. I worked at ledger 11 and Pathmanesan at ledger 12. I worked at this branch for 7 years. I saw Pathmanesan every day for 7 years.

We had tea and vadai at Ambal Café every day. Sometimes, I would not have money and Paths would pay and not say a word. And, on salary day we went to Grand Oriental Hotel which was next door to the Bank and had beer to celebrate. I left the bank in 1979 and went overseas but always kept in touch with "Paths" as I affectionately called him.

I considered him my best friend because he was one I could discuss my problems with. He would listen without being judgmental and offer thoughtful advice. The best thing I loved about him was his laughter.

Paths was a companionate and religious human being. He was kind and friendly to all. He was always positive and never had a harsh word about anyone and never engaged in gossip. He was a man of few words and was proud of and loved his family.

I never visited Sri Lanka because of the situation and when I retired in Jan of 2015 one of the first things I did was to visit Jaffna and meet Paths. I was overwhelmed when I embraced him. It was like I was meeting him after a few months, it was actually over 36 years. We had a few drinks on his balcony every day for a few days and reminisced about old times and his wife served me dinner all those days. That was a precious experience and would remember it to my dying days. Paths



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

knew that I will be visiting Jaffna to meet him In February of 2023 and now I have lost the primary reason for my visits to Jaffna

Paths died suddenly but his memory will be always be with us and his legacy will continue through his children and grandchildren. I will miss my dear friend dearly but I am grateful for having known Paths for over 53 years. May his soul Rest in Peace.

***Ravi Velauthapillai,***
***Attorney at Law (Sri Lanka),***
***MBA, MACC (USA).***

He who is most slow in making a promise is the most faithful in performance of it

– ***Jean-Jacques Rousseau.***

God gives every bird its food, but he does not throw it into its nest

– ***J.G Holland.***

Luck is what happens when preparation meets opportunity

– ***Seneca.***

Forget past mistakes. Forget failures. Forget everything except what you're going to do now and do it

– ***William Durant.***

A crust eaten in peace is better than a banquet partaken in anxiety

– ***Aesop.***

All achievements, all earned riches, have their beginning in an idea

– ***Napoleon Hil.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அன்பு நண்பர் பத்மநேசன்

1970ம் ஆண்டிலிருந்து இலங்கை வங்கி York Street Branch ல் அவருடன் நண்பனாக பழகினேன். அவருடைய எப்போதும் புன்சிரிப்புடன் எல்லோருடனும் 'மச்சான், மச்சான்' என பழகிய விதம் பிடித்திருந்தது. தமிழர், சிங்களவரென வித்தியாசம் பார்க்காததால் பலர் அவருடன் நட்பாக பழகினார்கள்.

வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்ததால் நாளடைவில் பதவி உயர்வு பெற்று முகாமையாளராக பதவியேற்றார். 2004ம் ஆண்டு லண்டனிலிருந்து விடுமுறைக்கு குடும்பத்துடன் வந்த போது அவரும், அன்பு மனைவியாரும் மிகவும் அன்புடன் அவரது கொக்குவில் வீட்டில் விருந்துடன் உபசரித்தது இன்றும் மிக நெகிழ்ச்சியாக மனதில் அசைபோட்டு பார்க்கிறேன்.

ஓய்வு பெற்ற பின்னரும் பலமுறை எனது யாழ் வங்கிக் கணக்கு விஷயமாக பல பிரச்சினைகளுக்கு ஒரு சகோதரன் போல முன் நின்று தொடர்புகளை ஏற்படுத்தி உதவிகளை செய்ததை என்றென்றும் மறக்கமுடியாது. இப்போது வரைக்கும் Viber ல் Foreign friends group ஏற்படுத்தி அனேகமான வங்கி நண்பர்களின் பிறந்ததினங்களை அடிக்கடி நினைவுபடுத்தி, தொடர்புகளை ஏற்படுத்தினார். இனி யார் செய்வார்? எதிர்பாராத விதமாக ஒரு ஆருயிர் தோழனை, சகோதரனை பிரிந்து மீளா துயரத்தில் ஆழ்ந்து தவிக்கிறோம்.

அவரது அன்பு மனைவியார் லலிதா, மகன் முகுந்தன், மற்றும் மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் எனது மனைவி ரதி, மகன் குடும்பத்தினருடன் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறேன். அவரது ஆத்மா நல்லூர் முருகன் பாதாரவிந்தங்களில் சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி

**க. நடனசிவம்,**
**(லண்டன்).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A decent man

My memories of Paduman (as we used to fondly call him) take me back to our school days at St.Patrick's College. He was 1 year senior to me in school but we were close friends. In school, since he was very good in Math, he was my go-to guy for any help with my math homework. He was my neighbour too in Jaffna; so we shared a lot of things in common. A very smart and decent human being, always ready to help others.

After school both of us worked at the Bank of Ceylon, Colombo and I have very fond memories of him during our respective work lives at the bank. We parted ways when I left to the Middle East in 1981 but kept in touch with him. The last time I saw him was at his office in Jaffna.

What can I say, he was a gentle, smart, unassuming, and above all a decent man, who has been, unfortunately, snatch from all of us at a relatively young age.

May his soul rest in peace!!!

***Stanley Sellakumar,***
***Retired Bank Manager.***

The pessimist complains about the wind, the optimist expects it to change; the realist adjusts the sails

– ***William Arthur Ward.***

Life is to be enjoyed, not endured

– ***Gordon B. Hinckley.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி - வடமாகாண உதவிப்பொது முகாமையாளரின் அஞ்சலியுரை

இவ் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்கின்ற வள்ளுவர் தம் வாக்குக்கிணங்க இப்பூவுலகில் அறநெறிகளுக்கமைவாக வாழ்ந்து அமரத்துவமடைந்த திரு. கந்தையா பத்மநேசன் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தே r.

அன்னார் இலங்கை வங்கியின் பல படிநிலைகளிலும் கடமையாற்றிய குறிப்பாக யாழ் மாவட்டத்தின் வேலணை, திருநெல்வேலி, யாழ் 2ம் அதி மேற்தரக்கிளை, யாழ் அதிமேற்தரக்கிளை ஆகியவற்றில் பணிபுரிந்த காலங்கள் பசுமையானவை. நான் அவருடைய வழிகாட்டலின் கீழ் யாழ் அதி மேற்தரக்கிளையில், இணைந்து கடமையாற்றிய நாட்களை மறக்கமுடியாது. அவருடைய சாந்தமான தோற்றமும், கனிவான புன்சிரிப்பும், எல்லோரிடத்திலும் அன்பாக பழகும் பண்பும் நெஞ்சில் நீங்காத நினைவுகளாக இன்றும் பதிந்திருக்கின்றது.

அது மட்டுமன்றி தன் ஓய்வு காலத்திலும் கூட பெரும்பாலான இலங்கை வங்கி குடும்ப உறுப்பினர்களின் பிறந்த தினத்தினை கைத்தொலைபேசி வாயிலான குறுஞ்செய்தி ஊடாக அனைவருக்கும் நினைவூட்டி ஓர் சிறந்த கைங்கரியத்தை முன்னெடுத்து வந்தார்.

இத்தகைய ஓர் உத்தமரின் பிரிவு அவர் தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஈடு செய்ய முடியாத ஓர் பேரிழப்பு. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவருடைய புனித ஆத்மா இறை திருவடிகளில் சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

திரு. வ. சிவானந்தன்
உதவிப்பொது முகாமையாளர்
இலங்கை வங்கி – வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் . கே. பத்மநேசன் அவர்களுக்கான அஞ்சலி உரை.

இச் சந்தர்ப்பத்தில் நான் நேரில் நின்று என் மனதில் உள்ள பதிவுகளை சொல்ல முடியாமைக்கான எனது உடல் நலக் குறைவை நொந்து கொள்கிறேன்.

நாங்கள் திருமணம் புரிந்த 1978ன் அடுத்தவருடம் புதுமணத் தம்பதிகளாக கல்முனைக்கு வந்த இவர்களின் இளமைத் தோற்றம் வரவேற்பின் போது அன்றைய நிகழ்வு என் கண் முன்னே நிழலாடுகின்றது. மனிதருள் மாணிக்கம் தன்னிகரில்லாத் தொண்டன் போன்ற பலசொற்றொடர்கள் ஒருவரைப் பற்றி கூற பயன்படுத்தலாம் ஆனால் இவற்றிற் கெல்லாம் அப்பால்பட்ட ஒரு அதிசயபிறவிதான் எனது நண்பர் "பப்பி" எனும் பத்மநேசன்.

ஆங்கிலத்தில் (Irreparable loss) என்ற ஒரு சொற்பதம் உண்டு. அதாவது "ஈடு செய்ய முடியாத இழப்பு" என்பதாகும். அதற்கு பொருத்தமானவர்தான் இவர். மிகஆழமானவர் அறிவில் மட்டுமல்ல ஆற்றல் ஏனையோருடன் பழகும் பண்பு கல்வி என அடுக்கிக் கொணண்டே போகலாம்.

இவருடைய ஒரு விசேட பண்பு அல்லது ஏனையோரை நேசிக்கும் விதம் மிகவும் புதுமையானது. இனம் புரியாதது. வங்கியாளர்களிடையே ஒரு உறவுப்பாலத்தை உருவாக்குவதற்கு மிகமிக அற்புதமான திறமையைக் கையாண்டார்.

அதாவது வங்கி உலகில் யாழ்.மாவட்டம் மட்டுமல்ல வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணம் கொழும்பு மாநகர் இடங்களில் பணியாற்றும் இளநிலை ஊழியர்களது பிறந்த நாட்களையும் அவர்களது தொலைபேசி இலக்கங்களையும் (Contact Number) தவறாது சகல ஊழியர்களதும் மொபைல் தொலை பேசிக்கும் S.M.S எனும் குறுந் தகவல் மூலம் அனுப்பிவைத்து ஆச்சரியத்தில் எம்மை வைத்திருந்தார். இது எவ்வளவு பெரியவிடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது யாருக்கும் புரியாத புதிர். இந்த அளப்பரிய சேவை மூலம் எமக்கிடையேயான உறவுப் பாலத்தை பலப்படுத்தி வந்தார்.

இதை யார் இனிச் செய்வார். அதனால் தான் ஈடுசெய்ய முடியாத இழப்பு எனக் குறிப்பிட்டேன். அமைதியான சுபாவம் கொண்ட என் நண்பர் கடைசி நேரத்தில் கூட தன்னகத்தே குடிபுகுந்திருந்த நோய் எனும் அரக்கனைப் பற்றி எமக்கு தெரிவிக்காமலே அமைதியாக சிவபதம் அடைந்துள்ளார்.

வங்கி உலகின் சார்பாக அன்னாரது ஆத்மா சாந்திக்காகவும் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் அமைதிக்காகவும் பிரார்த்தித்து எனது மனைவியுடன் (அவர் "பத்தண்ணை"என்றே அழைப்பார்) அமைதி பெறுகின்றேன்.

அன்னார் இந்த மண்ணில் தோன்றிய மாணிக்கம். வங்கி வரலாற்றில் வைரவரி எழுதி வரலாறு படைத்திட்ட உன்னத புருஷர்.

**நண்பன் ந.சிவரட்ணம்,**
**ஓய்வுநிலை உதவிப் பொதுமுகாமையாளர் (வட பிராந்தியம்),**
**வல்வெட்டித் துறை.**

We often take for granted the very things that most deserve our gratitude

*– Cynthia Ozick.*

Well done is better than well said

*– Benjamin Franklin.*

Remember that everyone you meet is afraid of something, loves something and has lost something

**– Jackson Brown Jr.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர்களில் ஒரு மாணிக்கம்

இன்று இந்த உலகில் நாளாந்தம் வாழ்வையும் மரணத்தையும் காண்கிறோம். இது உலக நியதி. ஆனால் நியதிகளுக்கு உட்படாமல் சில உயர்ந்த ஆத்மாக்கள் மட்டும் காலம் காலமாக நம்மில் அழியாமல் வாழ்வதும் நாம் வாழும் வரை அவர்களும் வாழ்வதும் அவர் தம் நினைவுகள் மறக்க முடியாததும் இந்த உலகில் நடப்பது வழக்கம் தான். அப்படியான சில ஆத்மாக்கள் உறவினர் நண்பர் என்ற எல்லையைத் தாண்டி அருவமாக நம்மில் வாழ்வதும் வழமையான ஒரு நிலைப்பாடுதான்.

அப்படி மறதிகளின் எல்லையைத் தாண்டி வாழ்கின்ற பலரை நாம் கண்டிருக்கிறோம். அப்படி நம்மிடையே வாழாமல் வாழும் ஒரு ஜீவன்தான் எமது ஆருயிர் நண்பன் அமரர் பத்மநேசன் அவர்கள்.

சில இழப்புக்கள் காலப் போக்கில் ஜீரணிக்கலாம் ஆனால் ஜீரணிக்கவே முடியாத இழப்பாகத்தான் நண்பன் பத்மநேசனின் இழப்பை நாங்கள் பார்க்கின்றோம்.

"பப்பி" என்ற செல்லப் பெயரைக் கேட்டாலே கோபம் என்ற வார்த்தைக்கே அர்த்தம் தெரியாது எல்லோருக்கும் ஓடி ஓடி உதவும் ஒரு சிறிய உருவம்தான் என் கண்முன்னால் நிற்கிறது. இனி, நண்பர்கள் வட்டத்தையும் தாண்டி அவரவரது பிறந்த நாட்களை பட்டியலிட்டு வைத்துக் கொண்டு விடி காலையிலேயே அவர்களுக்கு வாழ்த்தும் சொல்லிவிட்டு மற்ற நண்பர்களுக்கும் அறிவிக்கும் பழக்கம் எந்த ஒரு நண்பனுக்கும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்படிச் சில அரிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டவர் எமது பப்பி. எந்த ஒரு நிகழ்வையும் முன்னின்று நடத்தும் ஒரு திறமையானவர். ஆனால் அவர்தான் நடத்துகின்றார் என்று யாருக்கும் தெரிய வராது. இப்படி ஒரு பண்பாளர். அவரது இழப்பை நினைத்துப் பார்க்கவே முடிவதில்லை. என்ன செய்வது ஒரு மனிதன் பிறக்கும் போதே அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவும் நிச்சயம் செய்யப்பட்டு விடுகிறது. இதில் விதி விலக்கு என்ற சொல்லுக்கே இடமில்லை. அவரது நற் பண்புகளை நினைவு கூர்ந்து அவரையும் அவர் புகழையும் நிலை நிறுத்துவது அவர் தம் வாரிசுகளின் கடமை.

அவரது பிள்ளைகளுக்கும் பாரியாருக்கும் எம்மால் என்ன ஆறுதல் சொல்ல முடியும். துணை வேண்டும் வயதில் துணையை இழப்பதின் சோகம் வி ரிக்கவே முடியாத ஒரு துன்பம். அவருக்கும் அவரது குடும்பத்தி ருக்கும் இறையருள் கிடைக்க வேண்டுமென்றும் அவர்கள் மனதுக்கு விரைவில் சாந்தி கிடைக்க வேண்டுமென்றும் மனதார வேண்டுகின்றேன். இதைவிட நாங்கள் வேறென்ன செய்ய இயலும்.

இறையருள் என்றும் அவர்களுக்கு கிட்ட வேண்டுமென்று மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!!

**க.பாலசுப்பிரமணியம்,**
**முன்னாள் உதவிப் பொது முகாமையாளர்,**
**இலங்கை வங்கி ( வட பிராந்தியம்).**

The two most powerful warriors are patience and time. So remember: great achievements take time, there is no overnight success

*–Leo Tolstoy.*

To forgive is the highest, most beautiful form of love. In return, you will rece4ive untold peace and happiness

*–Robert Muller.*

There is no substitute for consistency

**–unknown.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ்ந்த உத்தமர்

அமரர் பத்மநேசன் அவர்கள் அமைதியும், ஆற்றலுமுள்ள ஒரு ஆளுமை மிக்க வங்கியாளர் ஆவார். அமரர் அவர்களை திருநெல்வேலிக் கிளையில் முகாமையாளராக இருந்த காலத்திலிருந்து நான் நன்கு அறிவேன். வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் நடைபெறும் முகாமையாளர்கள் மாதாந்த கூட்டத்தில் அவரை நேரில் தவறாது சந்திப்பேன். அமரர் பத்மநேசன் அவர்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் கடமையாற்றிய மொழிப்புலமையுள்ள, பண்புடைய வங்கியாளராவார்.

அமரர் பத்மநேசன் அவர்கள், மற்றவர்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து சிறியோர், பெரியோர், இன்னவர், இனியவர் என்ற எந்த வேறுபாடுமின்றி மிகுந்த கரிசனையுடன் அவர்களை அணுகி அவர்கள் தொடர்பான பிறந்த நாள் செய்திகளை நவீன தொழில்நுட்ப தொலைபேசி கருவியினூடாக பரிமாற்றி எல்லோர் இதயங்களிலும் இடம் பிடித்த ஒரு மகத்தான மனிதராவார்.

அவரது ஆங்கில புலமை எல்லோராலும் சிலாகித்து பேசப்படுகின்ற ஒரு திறமையாகும். இவ்வாறான புலமையும். ஆளுமையும் இருந்தாலும் சக மனிதருடன் பழகுவதில் மனிதருள் மாணிக்கமாக திகழ்ந்தார். அவரது ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”

**கு. சிவஞானசுந்தரம்**
**பிரதான முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**அதிமேற்தரக் கிளை**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளைச் சுமந்து நிற்கின்றோம்

நான் இலங்கை வங்கியில் 1967ம் ஆண்டில் இணைந்திருந்தேன். நான் திரு.பத்மநேசன் அவர்களை முதன் முதலில் 1973ம் ஆண்டில் இலங்கை வங்கியின் யோர்க் வீதியில் அமைந்திருந்த வங்கிக் கிளையில் சந்தித்தேன். அவர் இலங்கை வங்கியில் 1969ம் ஆண்டிலிருந்து கடமையாற்றத் தொடங்கியிருந்தார்.

இலங்கை வங்கி யோர்க் வீதிக்கிளையில் திரு.பத்மநேசன் நடைமுறைக் கணக்குப் பகுதியிலும் நான் இதே கிளையில் காசுப் பகுதியிலும் கடமையாற்றிக் கொண்டிருந்தோம். இக் காலப் பகுதியிலிருந்து எமது நட்பு ஆரம்பமாகியிருந்தது. நாங்கள் அடிக்கடி சந்தித்து அளவளாவினோம். வங்கியின் சிற்றுண்டிச் சாலையில் ஒன்றாக உணவருந்தினோம். மிகவும் அன்னியோன்னியமாக பழகினோம். நாட்டு நடப்புக்கள், வங்கித்தொழில், அரசியல் ஆகியன எங்களது முக்கிய விடயங்களாகவிருந்தன.

திரு.பத்மநேசன் 1973ம் ஆண்டில் யோர்க் கிளையிலிருந்து இடமாற்றம் பெற்றார். பின்னர் ஹிங்குராணை கல்முனை வேலணை ஊர்காவற்துறை திருநெல்வேலி யாழ்ப்பாணம் 2ம் கிளை ஆகிய வங்கிக்கிளைகளில் கடமையாற்றினார். இதன் பின்னர் இவருடன் சேர்ந்து ஓரிடத்தில் கடமையாற்றக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. எனினும் எங்கள் நட்புத் தொடர்ந்து வந்தது. கடந்த 25 வருடங்களில் எமது நட்பு மிகவும் ஆழமாகவும் அன்னியோன்னியமாகவும் இருந்தது. அவரின் மகளின் பதிவுத் திருமணத்திற்கு என்னை ஒரு சாட்சியாகப் போட்டதை இதற்கு ஒரு உதாரணமாக கூறலாம்.

திரு.பத்மநேசன் சிறந்த பண்பாளர் நண்பர்களை மதிப்பவர் அன்புடன் பழகுபவர் உதவி செய்பவர். இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வருகின்ற தன்னுடன் கடமையாற்றியிருந்த நண்பர்கள் (ஏனைய சமூகத்தினைச் சேர்ந்தவர் களும் இதில் அடங்குவர்) ஆகியோரை வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்து மகிழ்ந்தார். தனது நண்பர்களுடன் தொடர்ச்சியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளை வைத்திருந்தார். தனது நண்பர்களுடன் இணைந்து ஒரு குழுவை ஏற்படுத்தியிருந்தார். இக் குழு அங்கத்தவர்களுடைய பிறந்த தினம் முக்கிய நாட்களைக் கொண்டாடக்கூடிய ஏற்பாடுகளை திரு.பத்மநேசன் அவர்களே முறையாகச் செய்து வந்தார். இக் குழுவிற்கு "Happy Home" " சந்தோச இல்லம் " என்று பெயரை திரு.பத்மநேசன் சூட்டியிருந்தார். நானும் இக் குழுவில் ஒரு அங்கத்தவர். இவர் இறைவனடி சேர்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பதாக எனக்கு ஒரு குறும் செய்தியை அனுப்பியிருந்தார். இச் செய்தியை கீழே தருகின்றேன்

## SIX LITTLE STORIES WITH LOTS OF MEANINGS

I. Once all villagers decided to pray for rain. On the day of prayer, all the people gathered, but only one boy came with an umbrella. That is faith.

II. When you throw babies in the air, they laugh because they know you will catch them. That is trust.

III. Every night we go to bed without any assurance of being alive the next morning, but still we set the alarms to wake up. That is hope.

IV. We plan big things for tomorrow in spite of zero knowledge of the future. That is confidence.

V. We see the world suffering, but still, we get married and have children. That is love.

VI. On an old man's shirt was written a sentence 'I am not 80 years old; I am sweet 16 with 64 years of experience.' That is attitude.

Have a happy day and live your life like these six stories.
Remember – Good friends are rare jewels of life, difficult to find and impossible to replace!!

அமரர்.பத்மநேசன் ஆத்மா இறைவனடி சேர்ந்து இன்புற்றிருக்க நான் பிரார்த்திக்கின்றேன்.

**வ.தில்லைநாதன்,**

**ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர்,**

**(சந்திரகுமார், லோகநாதன், சகாதேவன் மற்றும்** Happy Home **நண்பர்கள் சார்பாக).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நீங்கா இடம் பிடித்த "ஐயா"
# அமரர். கந்தையா பத்மநேசன்

எல்லோரையும் திகைக்க வைத்து விட்டு எங்கு சென்றீர்கள் ஐயா. தங்கள் சுகவீனம் அறிந்து ஓடொடி வந்து அவசர சிகிச்சை பிரிவில் தங்கள் நிலைமையைப் பார்த்தபோது எனது நெஞ்சம் பட்ட துன்பம் என்பது... சொல்ல வார்த்தைகள் இல்லை. தங்கள் துணைவியார் அருகில் நின்றிருந்தார். கூப்பிடுங்கோ என்று சொன்னதும் ஐயா என்றேன் உடனடியாக தங்கள் கை மற்றும் முகத்தை அசைத்தீர்கள். ஐயா ஆயிரம் வார்த்தைகள் பேசியது போல் இருந்தது.

தங்களுடன் திருநெல்வேலிக் கிளையில் இரண்டாவது உத்தியோகத்தராக கடமையாற்றிய போது தங்களுடைய உயர்ந்த பண்புகள் என்னைக் கவர்ந்தன. அன்பு, பொறுமை, அடக்கம், மற்றும் நேர்மை போன்றவற்றிற்கு வரைவிலக்கணமாய் திகழ்ந்து சிறந்த வங்கியாளனாய் வாழ்ந்தீரகள்.

தாங்கள் பதவி உயர்வு பெற்று இலங்கை வங்கி ஸ்ரான்லிவீதி இரண்டாம் மேற்தரக் கிளைக்கு மாற்றலாகிச் சென்றபொழுது இரவு 8.00 மணியிருக்கும் அன்று வேலை சற்று அதிகம் என்னை முகாமையாளர் அறைக்கு அழைத்து சிறியபை ஒன்றைத் தந்தீர்கள் அதற்குள் வங்கித் திறப்புக் கோர்வைகள் இருந்தன. ஏன் ஐயா இதனைக் கவனமாக வைத்திருக்கவா? என்று கேட்டேன். இல்லை நாளையில் இருந்து நீங்கள்தான் திருநெல்வேலிக் கிளையின் முகாமையாளர் என்றார். ஒருபுறம் வியப்பு மறுபுறம் மகிழ்ச்சி ஏனென்றால் யார் முகாமையாளராக பதவியேற்கப் போகின்றார் என்பதை கடைசிவரையும் அறியவில்லை.

அந்த அளவிற்கு என்னைச் சிபார்சு செய்து எனது வங்கி வாழ்க்கையில் முதலாவது முகாமையாளர் பதவியினை ஆரம்பித்து வைத்தவர். அவரின் நல்லாசி காரணமாக பின்னர் யாழ். இரண்டாம் கிளை, பருத்தித்துறை, மானிப்பாய், யாழ்ப்பாணம் போன்ற கிளைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமையாளராகவும், யாழ்ப்பாணம் வன்னி போன்றவற்றின் பிராந்திய முகாமையாளராகவும் பணியாற்ற முடிந்தது.

அன்னாரின் சிறந்த சேவைகளில் ஒன்று இலங்கை வங்கியின் சமகால பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் அனைவரதும் பிறந்த நாட்களை எதுவித தாமதமின்றி அன்று காலை குறுஞ் செய்திகள் மூலம் எமக்கு அறியத் தந்தார். அதுமாத்திரமல்ல அவர்களது தற்போதைய பதவி வேலை செய்யும் கிளை அவர்களின் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை மிகவும் துல்லியமாக அறியத்தந்தார். ஒருவர் வேறுகிளைக்கு மாற்றலாகிச் சென்றால் அதில் அவருடைய புதியகிளையையும் அறியத் தந்தார். நான் பிரதேச முகாமையாளராக இருந்து அறியமுடியாத விடயங்களைக் கூட அறியத் தந்தார். அந்த அளவிற்கு அன்னார் எல்லோருடனும் நட்புறவுடனும் அன்பாகவும் பழகிவந்தார். அவரின் இச்சேவை காரணமாக வங்கி ஊழியர்களுடன் சிறந்த நட்புறவை பேணமுடிந்தது. அதுமட்டுமல்ல அன்னார் எல்லா ஊழியர்கள் மத்தியிலும் 'பத்மநேசன் ஐயா' என்று பிரபலமாகி விளங்கினார்.

திரு. பத்மநேசன் ஐயாவின் பிறந்தநாள் ஐப்பசிமாதம் 4ம்திகதி ஆகும். எனது மனைவி முதல் மாதமே நினைவூட்டிவிடுவார் காரணம் அந்த அளவிற்கு எல்லோருக்கும் மிகுந்த அன்பினைக் கொண்டி ருந்தார்கள். இதனால் அன்னாரின் இறுதிக் கிரிகைகளின் போது இலங்கையின் கொழும்பு போன்ற பிறபிரதேசங்களிலிருந்து பலர் கலந்து கொண்டார்கள்.

பத்மநேசன் ஐயா அவர்கள் ஆங்கிலத்தில் மிக்க புலமை மிக்கவராக மிளிர்ந்ததால் முக்கியமான கடிதங்களை எழுதும் போதெல்லாம் அவரிடத்தில் காண்பித்து திருத்தங்களை மேற் கொண்டு நிறைவு செய்வோம்.யாராவது முக்கியமான கடிதம் வரைவதென்றால் திரு. பத்மநேசன் ஐயாவிடம் செல்வோம் என்பார்கள். அந்த அளவிற்கு அன்னார் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினார். அன்னாரின் நற்பண்புகள் செயற்பாடுகள் பற்றி கூறிக் கொண்டே செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் தமது இறுதி நேரத்தில் கூட எவர்க்கும் எதுவித பிரச்சனையும் ஏற்படுத்தாமல் நிம்மதியாக இறைவனடி சேர்ந்தார். அந்த அளவிற்கு அவர் மேன்மையாக செயற்பட்டிருந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிராத்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.பிரேமராஜன்,**
**ஓய்வுபெற்ற இலங்கை வங்கி,**
**முன்னாள் பிரதேசமுகாமையாளர் (வன்னி யாழ்ப்பாணம்),**
**முன்னாள் பதில் பிரதான முகாமையாளர்,**
**இலங்கை வங்கி (யாழ்ப்பாணம்).**



Thiyagalingam Sundharalingam
16 November at 19:31 ·

இலங்கை வங்கியின் பல படி ஏறி அதன் முகாமையாளராகப் பதவி வகித்து வங்கிக்கு பெருமை சேர்த்ததுடன் சக வங்கி ஊழியர்களின் நன்மதிப்புடனும் பாசத்துடனும் இன்றுவரை இருந்து எம் வங்கிச் சமூகத்தை விட்டு ஆறாத் துயரில் பிரிந்து சென்ற திரு.K. பத்மநேசன் (பப்பி ஐயா) இன்று எம்முடன் இல்லை. அவர் விட்டுச் சென்ற (ஓய்வு பெற்ற பின்) ஓய்வூதியர்களினதும் தற்போது கடமையாற்றும் வங்கி ஊழியரினதும் பிறந்த தினத்தை எல்லா ஊழியர்களுக்கும் தகவல்களைக் கொடுத்து வங்கி சமூகத்தின் தொடர்புகளை இறுகப் பற்றுவதில் ஒரு பாலமாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த செயலுக்காக இன்று வரை யாரிடமும் எந்த வித ட்டணமும் இன்றி செயற்படுத்தி வந்தார். கடைசியாக நடைபெற்ற எமது ஓய்வூதியர் சங்க பொதுக் கூட்டத்தில் பொன்னாடை போட்டு கௌரவிக்கப்பட்டார். இவரைப்போன்ற இப்படிப்பட்டவர்கள் இந்த மண்ணில் அரிதாகவே வாழ்கின்றனர்.அவரின் இந்த இழப்பு குறிப்பாக இலங்கை வங்கி சமூகத்தை ஆழ்ந்த துயரில் இட்டுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஓய்வூதியர்களின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு செய்ய முடியாத இழப்பு

மனிதன் பிறக்கின்ற பொழுதே இறக்கின்ற தேதியையும் சுமந்தே வருகின்றான்.பிறப்பும் இறப்பும் அவரவர் கையில் இல்லை. இருக்கின்ற வரைக்கும் அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்றார் வள்ளுவர். இதற்கு எத்தனை காலம் வாழ்ந்தான் என்பது கேள்வி இல்லை.

அந்த வகையில் சந்தன மரம் போல் அடுத்தவரை மகிழ்வித்து வாழ்ந்தார் அமரர் க.பத்மநேசன் அவர்கள். தினம் சோர்வில்லாது எந் நிலையிலும் அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை அவரது வங்கி நண்பர்கள் வட்டம் அறியும். அறிவு, தன்னடக்கம், செயல் திறமை, அன்பு, பணிவு, நிதானம் இவைதான் அன்னாரின் அணிகலன்கள்.

அன்னார் ஆற்றிய அளப்பரிய சேவை காரணமாக எமது சங்கம் நடாத்திய பொதுக் கூட்ட நிகழ்வொன்றில் அன்னாரைக் கௌரவித்து மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தோம்.

பணியில் ஓய்வு பெற்ற பின்னர் அன்னாருடைய திறமை அவர் தம் பணியினை இன்னொருவர் தொடரும் போதுதான் அதன் தாக்கமும் அன்னாரின் தியாக எண்ணமும் எமக்கு அறிய நேர்ந்தது. உண்மையைச் சொன்னால் ஈடு செய்ய முடியாத ஒரு வங்கியாளன்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை ஓய்வூதியர் சங்க உறுப்பினர்கள்சார்பில் தெரிவித்துவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி!சாந்தி!! சாந்தி!!!

**தி.செந்திநாதன்,**
**முன்னாள் ஓய்வு நிலை இலங்கை வங்கி சிரேஷ்ட முகாமையாளர்,**
**தலைவர், இலங்கை வங்கி ஓய்வுநிலை வங்கியாளர் சங்கம்,**
**யாழ்.மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தையும் செயலும் ஒன்றுபட வாழ்ந்தார் அமரர் கந்தையா பத்மநேசன் அவர்கள்.

ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்வில் ஏதோ ஒன்றை விதைக்கின்றான். இதனை மறுத்துரைக்க மாற்றுக் கருத்து எதுவுமில்லை. அவனது விதைப்பின் அறுவடை அடுத்தவரை - அடுத்தவர் மனதை மகிழ்வித்தால் அது அழியாது நிலைத்திருந்தால் அவர்கள் மரணத்திலும் நிச்சயம் வாழ்வார்கள். அதனால் மரணம் ஒரு முடிவுரை அல்ல..

தமது அறிவால், குரலால், சொல்லால், கற்பனையால், பழகும் பண்பால் தெரிந்தெடுத்த துறையால் தமது சேவையால் சிந்தையும் செயலும் ஒன்றுபட்டு அடுத்தவர்க்கு உதவும் நெறிமுறையால் தம்மை அர்ப்பணிப்பவர்களுக்கு நிச்சயம் மரணத்தின் பின்னரும் வாழ்க்கை உண்டு.

அந்தவகையில், அமரர் க.பத்மநேசன் அவர்கள் ஒரு சிறந்த வங்கியாளனாகவும் ஒரு நல்ல வங்கி முகாமையாளராகவும் சமூக பொறுப்புடன் வாழ்ந்து வந்தார். அடுத்தவர் நலத்தில் அக்கறையாக இருந்தமையாலும் பல நண்பர்களை சிந்தையில் இருத்தி அதிகாலையில் மலரும் மலர்களைப் போல் தினம் அதிகாலையில் மின்னஞ்சல் மூலம் வங்கியின் சமகால மற்றும் ஓய்வுநிலை ஊழியர்களது பிறந்த நாட்களை அடுத்தவருடன் பகிர்ந்து வந்தமையாலும் தம்பால் ஈர்த்தமையயாலும் எமது நெஞ்சத் திரையில் நீங்கா இடம்பெற்றார்.

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பார்கள் அதற்கமைய அறிவுள்ள ஆங்கில துணுக்குக்களை தேடிப் பிடித்து மற்றவர்களுக்கு பகிர்ந்து கொள்வதன் மூலம் ஆங்கில அறிவை மட்டுமல்லாது சமூகம் சார்ந்த நல்ல விடயங்களை ஒவ்வொரு விடியலின் போதும் நம் கைகளில் தவழவிட்டார். எமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதனை வாசிக்கும் போது எமக்குள் அன்னார் நீங்கா இடம் பிடித்து என்றும் வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமல்ல வங்கி ஓய்வூதியர்களால் வெளியிடப்படும் "நித்திய வங்கியாளர்"எனும் சஞ்சிகைக்கு எழுதப்படும் கட்டுரைகளை சரிபார்த்துக் (proof) கொடுப்பதும் நல்ல பயனுள்ள கட்டுரைகளைத் தந்து உதவுதலிலும் பெரும் பங்காற்றினார்.

அவ்வாறு சமூகத்தை நேசித்தது போன்று அன்னார் பறவைகளையும் நேசித்தார். அன்னாரது வீடு தேடிவரும் புறாக் கூட்டத்திற்கு தினம் தானியம் வழங்கி பறவைகளுக்கு உணவளித்தார்.

அதுமட்டுமல்ல ஒரு சிறந்த குடும்ப தலைவனாகவும் வாழ்ந்தார். ஆசைக்கொன்று ஆஸ்திக்கொன்று எனத் திரு. முகுந்தனையும் (மகன்) திருமதி. ந.கௌசல்யா (மகள்) ஆகியோரைப் பெற்று தம் வாழ்வில் பேரப் பிள்ளைகளோடு தம் அன்பு. மனைவி திருமதி. சிவநேசராணியுடனும் அன்பாக வாழ்ந்து அவர்களுக்காக தம்மை அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார்.

எது எவ்வாறாயினும் பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் இயற்கையின் நியதி. இந்த விலக்கொணா செய்திக்கு வருந்துதல் முறையோ என்கிறது கீதாசாரம். இருந்த போதிலும் வங்கி வாழ்வில் வரலாற்றைப் படைத்து ஒன்றாகப் பயணித்த அமரர் க.பத்மநேசன் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை நாம் தொடர்கின்ற போது நெஞ்சம் நெகிழ்கின்றது. அன்னாரது பங்கமில்லா நட்பும் பழகிய நாட்களையும் எண்ணிப் பார்க்க முடியாமல் இதயம் கனக்கின்றது. அன்னார் சுவாசித்த காற்றுச் சூழலில் வாழும் எமக்கு நியதியை மீறிய நெகிழ்வு வார்த்தைகளுக்குள் அடக்க முடியாமல் தவிக்கின்றது. நிலையிலா வாழ்க்கை என்று நிமிர்ந்து சொன்னாலும் கண்கள் குளமாவதை அடுத்தவர் பார்ப்பதிலிருந்து தடுக்க முடியவில்லை.

அறிவு, ஆளுமை, நேர்மை, கண்ணியம், கடமை என அனைத்தும் கொண்ட அன்பு நேசன் காட்டிய தங்கள் வழியில் பயணிப்பது எமக்கு கௌரவத்தை அளிக்கின்றது. அவரவர் விருப்பப்படி பப்பி என்றும் பத்மா என்றும் பாங்கர் என்றும் ஐயா என்றும் பத்தண்ணா என்றும் பலரும் பலவாறு பேர் சொல்லி அழைத்தார்கள் ஆனால் அன்னார் கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரலானது எல்லா விரல்களோடும் சேர்வது போன்று எல்லோரிடத்திலும் பேதம் காட்டாது அன்பைப் பொழிந்தார்.

இது நாடகம். இந்த உலக மேடையில் அன்னார் வகித்த பாத்திரம் இறைவன் அன்னாருக்கு கொடுத்த வரமாகும். நிறைவான வாழ்வும் நிகரற்ற போக்கும் நிலைத்திருக்க நீழ்துயில் கொண்ட அமரர். பத்மநேசன் அவர்கள் கடந்து வந்த பாதை முடிவு பெற்றாலும அன்னாரோடு பயணித்த நாம் அவரின் பாதச் சுவட்டை தொடர்து பயணிப்போம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி அன்னாரின் பிரிவால் துயருறும் அத்தனை நல் இதயங்களுடன் நாமும் இணைந்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போம்.

இருந்தாலும் மறைந்தாலும் இவர் போல யாரென்று ஊர் சொல்ல வாழ்ந்தார்.

நெருநல் உளனொருவன் இன்றில்லைஎனும்
பெருமை உடைத்து இவ் வுலகு.

நேற்று இருந்தவர் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**எஸ். நடராஜா,**
**ஓய்வுநிலை வங்கியாளர்.**
**சம்பியன் லேன், கொக்குவில்.**


Giritharasharma RN is with Pathmanesan Kandiah.
16 November at 08:04 ·

சிலருடன் கதைப்பதென்றால் கதைத்துவிடுங்கள்
சந்திக்கவேண்டுமென்று நினைத்தால் சந்தித்துவிடுங்கள்..
பிறகு நிரந்தரமாக கதைக்க முடியாமலோ
சந்திக்க முடியாமலோ போகலாம்

#போய் வாருங்கள் ஐயா...இறுதியாய் உங்களது பிறந்த தினத்தன்று 4.10.22 இல் கதைத்தது..
Pathmanesan Kandiah sir



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Remembrance of late Mr.K.Pathmanesan with full of tears and lot of grief from your obedient Ex.staff Mrs.C.G. Balakumaranathan

"Those, whom God loves much die young."

Mr.Kandiah Pathmanesan - a famous Banker at beginning, thereafter became one of the Grate Managers of Bank of Ceylon - The state - walk Financing Institution in our country of Sri Lanka.

He is well known to all present and Ex.staff - Staffs attached to BOC with remembrance of the dates of Births that he is the informer sending messages to all the people, in due course, up to date. And also let, to know the others, the dates of demise mostly related to BOC.

His sudden disappearance is unbelievable and unbearable. Mr.Pathmanesan was wise and honest. His quiet and calm manners were appreciable.

Hospitality and fondness were his good characters, which led him to words a divine life. His loss is irreparable, even though we missed him a lot, At - last we, with tears, say our final word, Sir Good bye to enter - into the Eternal life with our Almighty to be rest in peace.

Thanks with tears, and grief,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கி ஓய்வுநிலை பிரதம முகாமையாளர்

அமரர்

# கந்தையா பத்மநேசன்

## இதய அஞ்சலி

தரணியில்: 04.10.1948 வானில் : 16.11.2022



கலைஞானம் பெற்றுக்
கல்வியில் உயர்ந்து
கந்தையா பத்மநேசன்
இலங்கை வங்கியில்
பல பதவிகளை ஏற்றும் பெற்று
முதன்மை முகாமையாளராய்
சேவைநலம் புரிந்து
ஓய்வுநிலையிலும் ஓயாது
வாழ்நாள் முழுவதும்
வாய்த்த கல்வியால்
பயனுறக் கழித்தார்

திண்ணியர் ஆகப் பெற்றார்
கண்ணியம் மிக்காய்
சேவைக்காலம் திகழ்ந்தார்
புன்னகை புரிந்து
எம்மை நித்தம்
தன்னகத்தினில் கொள்வார்
எண்ணம் என்றும் எங்களது
ஏற்றமாய்க் கொண்டார்
அறிவு ஆளுமை ஆற்றல் என
செறிய கொள் பண்பினர்
தேறிய தம் ஆற்றலால்
இளையோரை உயர்த்தும் முதியர்

அறிந்ததை யார்க்கும் வழங்கும்
நோக்குடன் தினமும்
பொன்மொழியொடு பிறந்தநாள் செய்தியை
இலங்கை வங்கிக்
குடும்பத்து உறுப்பினர் அனைவர்க்கும்
குறுந்தகவலாய் தொலைபேசி வழியில்
வழங்கிக்
காலையில் ஒவ்வொருவரையும்
விழித்தெழுந்து வாழ்த்திடும்
பண்பினைத்
தூண்டி வளர்த்தவர்

திறன்பேசி வாரா
அக்காலம் முதல்
கைபேசி வழியிலே இக்
கருமத்தில் கண்ணானார்

ஆங்கில மொழித் தெரிவு
வங்கியில்
இளநிலை ஊழியர்க்கும்
வாய்த்திட வேணுமெனும்
எளிநிலை அறிந்து
பயிற்சிகள் பலவும்
குறுந்தகவலாய்
கைபேசியில்
சென்றெவர்க்கும் சேர்ந்திட
பயனுற்றோம் நயந்து!

தொண்ணூறும் கடந்தும்
தொடருவார் என்ற
எண்ணமதில் இருந்தோம்
எழுபத்தினாலிலேயே
எய்தாரே!
என்செய்வோம்
நெருநல் இருந்தவன்
இன்றில்லை
என்பதுவே
இயற்கையென
இயம்பிட
தேற்றுகிறோம் எம்மை!

பப்சீ ஐயாவென
பலரும் ஏற்றும்,
பத்மம் அமர்ந்தருள்
கலைமகள் ஞானம் வாய்த்த
கந்தையா பத்மநேசன்
தரணி விட்டே
வானில் ஒளிர்
தெய்வத்துள் கலந்தனரே!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இலங்கை வங்கி ஓய்வூதிய நண்பர்கள்
26.11.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலித்து நிற்கின்றோம்

மட்டுமா நகரில் உமைக் கண்டிட்ட மாத்திரத்தில்,
மனதினிலே மறையாது இடம்பிடித்துக் கொண்டாயே!
இட்டமொடு இனிய வராய்ப் பழகியுமே, எங்கள்
இலங்கை வங்கித் தாய்க்குப் பணிகள் பல புரிந்தாயே!
திட்டமிட்டு எதனையுமே திறமையுடன்செய்யும்,
திடம் கொண்ட வங்கியாளனாகத் திகழ்ந்தாயே!
கெட்ட அந்தக் காலன் உங்கள் உயிரைக் கவர்ந்திட்ட
காரணத்தால் நாங்களெல்லாம் கலங்கி நிற்கின்றோமே!

வங்கிகட்கு வருகின்ற வாடிக்கையாளர்களை, மகிழ்ந்து
வரவேற்று, உபசரித்து, வளமான சேவைகளை செய்தாயே!
எங்கும், எவரும், உம்மை ஏற்றி போற்றும் வண்ணம்
ஏற்ற பணிகள் புரிந்து ஏற்றங்கள் பெற்றாயே!
இங்கு எம்மோடிருந்து பணிகள் புரிவாயென்று
எண்ணியுமே இருந்திட்ட வேளையிலே எங்கள்
தங்க மனத்தோனே! உங்கள் உயிர் பிரிந்ததாலே
தாங்கொணாத் துயரத்தில் நாம் தவிக்கின்றோமே!


நட்புக்கு இலக்கணமாய் விளங்கி என்றும் நின்றாயே!
நன்மை தீமைகளில் கலந்து நம்மை அணைப்பாயே!
கிட்ட வந்து எம் குறைகள் கேட்டு உதவி செய்வாயே!
கெட்டவர்க்கும் நல்வழிகள் காட்டித் திருத்துவாயே!
மட்டற்ற மகிழ்ச்சியோடு நண்பர்களை மதிப்பாயே!
மனந் திறந்தே கதைகள் பேசிடுவாயே! எம்மை
விட்டுப் பிரிந்தனால் மிக்க வேதனை கொள்கின்றோமே!
வித்தகனே உமை நாமும் என்றுதான் காண்போமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கி ஊழியர்கள் பிறந்த நாட்களை என்றுமே மறக்காது,
வரிசைப் படுத்தியுமே வடிவமைத்துத் தந்து
இங்கிதமாய் அறிஞர்களின் அறிவுரைகளோடு எங்கள்,
இதயங்கள் பூரிக்க இதமாய் அறிவிப்பாயே!
இங்கதனைத் தொடர்வதற்கு யார்தான் உள்ளார்?
எங்களுக்குள் தொடர்புகளை ஏற்படுத்திச்சென்றவரே!
உங்கள் ஆத்ம சாந்திக்காய் நாங்களெல்லாம்
உயர்வான இவைனிடம் அஞ்சலித்து நிற்கின்றோமே!

**கலாபூஷணம் கீழ்கரவை கி.குலசேகரம்.**
**ஓய்வுநிலை வங்கி ஊழியர்,**
**ஆதர் சிறிநேன மாவத்த,**
**ஹப்புத்தளை.**


[illegible]
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதியவீடு அத்திவாரம் அமைக்கும் நிகழ்வின்போது







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வடமாகாண இலங்கை வங்கி
ஓய்வூதியர் சங்கத்தினால்
வெளியிடப்படும்
"நித்திய வங்கியாளர்" சஞ்சிகை
வெளியீட்டுக்குழு
ஏனைய உறுப்பினர்களுடன்



வடமாகாண இலங்கை வங்கி
ஓய்வூதியர் சங்கத்தின்
பொதுக்கூட்ட நிகழ்வில்
பொன்னாடை போர்த்திக்
கௌரவிக்கப்பட்ட போது



வங்கி நண்பர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா

உற்றார் அயலவர் உறவினர் நண்பர்கள்
கற்றோர் மற்றோர் கனிவோடு மதித்திட
நன்மதிப்புடையவராய் நானிலத்தில் வாழ்ந்தவரே!
சாந்தமான குணங்களும் சீர்தூக்கும் பார்வையும்
காந்தமென யாவரையும் கவர்ந்திடும் தன்மைகளும்
கொண்டு தரணியில் வாழ்ந்தவரே!

அறிவினால் அடக்கமும் அன்பினில் உயர்வும்
தர்மத்தின் தலைவனாய் தகுதியை சென்றதனால்
கர்வங்கள் கொள்ளாது கருத்தினில் முரண்படாது
தடைகள் எதுவரினும் தாண்டியும் வென்றவரே!
சொல்லிலும் செயலிலும் சோர்வின்றி
எண்ணிய கருமங்களை எளிதினில் முடிப்பவரே!

பாசம் என்றால் உங்களிடம் தான் நாங்கள் அறிந்தோம்
நல்லவிடயம் பலவற்றை உங்களிடம் நாம் அறிந்தோம்
இறுதிக்காலத்தில் எம்முடன் இருந்து எமக்குப் பலவழிகளில்
உதவி புரிந்தவரே ! உங்கள் முகம் காணத்துடிக்கின்றோம்
எங்கு சென்றீர்கள் எமை விட்டு சிவன் பாதம் சேர்ந்தீரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவன் துணை நிற்பாராக

செல்வராசா குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பத்மநேசன் (Sir)!

"காலம் இறந்துவிடுகிறது, ஆனால், அது மனிதனின் செயல்களால் வாழ்ந்துகொண்டிருக்கிறது."

தன் உதட்டினால் பல கேள்விகளுக்கு பதில் சொல்லும் சொந்தக்காரன், பிறரை மகிழ்விப்பதே தனது மகிழ்ச்சி என்னும் சிந்தனையாளன். பலரது பிறந்த தினத்தை அவர்களுக்கே நினைவூட்டும் நேசமான நேசக்காரன். சில விஷேச நாட்களை நாள்காட்டி கூட சொல்ல மறந்ததுண்டு ஆனால் பத்மநேசன் ஐயா எங்களுக்கு சொல்ல மறந்ததில்லை.

உங்கள் பற்றிய பசுமையான நினைவுகளுக்கு நன்றி ஐயா.

**த. சுரேஸ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 10 . 1948



மறைவு 16 . 11 . 2022

## கந்தையா பத்மநேசன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முதுநிலை முகாமையாளர்)

கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் குளங்கரை ஒழுங்கை கொக்குவில் கிழக்கு மற்றும் சம்பியன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநேசன் கடந்த (16.11.2022) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், சிவநேசராணியின் (ஓய்வுநிலை ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு கணவரும், கௌசல்யா, முகுந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தீஸ் (T.O), நிவேகி ஆகியோரின் மாமனாரும், அனுசயன், ஆதினி, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மங்களாதேவி, தவநேசன் (இறைவரித்திணைக்களம்), சித்திராதேவி, சிவநேசன் (HNB திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், திருமதி குணாட்ணம், ஞானேஸ்வரன், சந்திரசல்வரன், இராசேஸ்வரன் மற்றும் திருமதி ஜெயபாலன், திருமதி சிவானந்தராஜா, அம்பலவாணர், பரமேஸ்வரி, பிரேமலதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.


# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 10 . 1948



மறைவு 16 . 11 . 2022

## கந்தையா பத்மநேசன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முதுநிலை முகாமையாளர்)

கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் குளங்கரை ஒழுங்கை கொக்குவில் கிழக்கு மற்றும் சம்பியன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநேசன் கடந்த (16.11.2022) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், சிவநேசராணியின் (ஓய்வுநிலை ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு கணவரும், கௌசல்யா, முகுந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தீஸ் (T.O), நிவேகி ஆகியோரின் மாமனாரும், அனுசயன், ஆதினி, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மங்களாதேவி, தவநேசன் (இறைவரித்திணைக்களம்), சித்திராதேவி, சிவநேசன் (HNB திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், திருமதி குணாட்ணம், ஞானேஸ்வரன், சந்திரசல்வரன், இராசேஸ்வரன் மற்றும் திருமதி ஜெயபாலன், திருமதி சிவானந்தராஜா, அம்பலவாணர், பரமேஸ்வரி, பிரேமலதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.


# மரண அறிவித்தல்



## கந்தையா பத்மநேசன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முதுநிலை முகாமையாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.10.1948 | 16.11.2022 |

கோவில் வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் குளங்கரை ஒழுங்கை கொக்குவில் கிழக்கு மற்றும் சம்பியன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநேசன் கடந்த (16.11.2022) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் - இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும் சிவநேசராணியின் (ஓய்வுநிலை ஆசிரியை - திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு கணவரும் கௌசல்யா, முகுந்தன்(பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தீஸ் (T.O), நிவேகி ஆகியோரின் மாமனாரும் அனுசயன், ஆதினி, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மங்களாதேவி, தவநேசன் (இறைவரித் திணைக்களம்), சித்திராதேவி, சிவநேசன் (HNB திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், திருமதி குணாட்ணம், ஞானேஸ்வரன், சந்திர சல்வரன், இராசேஸ்வரன் மற்றும் திருமதி ஜெயபாலன், திருமதி சிவானந்தராஜா, அம்பலவாணர், பரமேஸ்வரி, பிரேமலதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் நடைபெற்று பூதவுடல் முப 11 மணியளவில் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**மண்ணில் : 04.10.1948**



**விண்ணில் : 16.11.2022**

காலைக் கதிரவன் தோன்றும் முன்பே - உந்தன்
சோகைச் செய்தி வந்திடுமே - எமது
கோல விழி நீர் சொரிய - இன்று
மீளாத்துயில் கொண்டு நெடுந் தூரம் சென்றீரோ?

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## அமரர் கந்தையா பத்மநேசன்

(ஓய்வுநிலை இலங்கை வங்கி சிரேஷ்ட முகாமையாளர்)

யாழ்மாவட்ட இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம் - யாழ்ப்பாணம்

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## கந்தையா பத்மநேசன்

தோற்றம்
04.10.1948

மறைவு
16.11.2022

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
முகாமையாளர், ஊழியர்கள்
இலங்கைவங்கி, திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ

# சிவத்திரு. கந்தையா பத்மநேசன்

## அவர்களின் சிவப்பேறு குறித்த செய்தி



சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே - திருமந்திரம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

04.10.1948 16.11.2022

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.



# கண்ணீர் அஞ்சலி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- பிரிவால் துயருறும் -

E05-பிரிவு மொறட்டுவை பொறியியல் பீட நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

1948 . 10 . 04

2022 . 11 . 16

## அமரர்.கந்தையா பத்மநேசன்

(முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர்)

அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆழ்ந்த துயரத்துடன்
புன்னாலைக்கட்டுவன்
இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

---

உ
சிவசிவ

# திருவடிப்பேற்று வழிபாட்டு அழைப்பிதழ்

(வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்)

## சிவத்திரு. கந்தையா பத்மநேசன்

சிவபூமியில்
04 . 10 . 1948



சிவபுரத்தில்
16 . 11 . 2022

அன்புடையீர்!

கடந்த 16-11-2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் **சிவத்திரு.கந்தையா பத்மநேசன்** அவர்களின் திருவடிப்பேற்றை முன்னிட்டு "புனிறு நீக்கிப் புனிதமாக்கல்" என்கின்ற தூய்மைப்படுத்தல் வழிபாடுகளும், "பெரியோர் சேர்த்தல்" வழிபாடுகளும், எதிர்வரும் 14-12-2022 புதன்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், பின்னர் திருவடிப்பேற்று வழிபாடுகள் 16-12-2022 வெள்ளிக்கிழமை அன்று காலை நீத்தாரின் இல்லத்திலும் இடம்பெறும்.

தொடர்ந்து 16-12-2022 வெள்ளிக்கிழமை அன்று பகல் 12.00 மணியளவில் ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இறையடி எய்தும் ஆருயிர் அமைதிபெற நடைபெறும் வழிபாட்டிலும், மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மெய்யன்புடன் அழைக்கின்றோம்.

குளாங்கரை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Life Quotes

- I'm not telling you it's going to be easy – I'm telling you it's going to be worth it

  *–Art Williams.*
- If we're growing we're always going to out of our comfort zone

  *–John Maxwell.*
- How many cares one loses when one decides not to be something but to be someone

  *–Coco Chanel.*
- The roots of education are bitter, but the fruit is sweet

  *–Aristotle.*
- You must be the change you wish to see in the world

  *–Mahatma Gandhi.*
- He that can have patience can have what he will

  *–Benjamin Franklin.*
- Anyone who has never made a mistake has never tried anything new

  *–Albert Einstein.*
- Innovation distinguishes between a leader and a follower

  *–Steve Jobs.*
- The mind is like a parachute – it works only when it is open

  *–Author Unknown.*
- Yesterday is gone. Tomorrow has not yet come. We have only today. Let us begin

  *–Mother Teresa.*
- I find that the harder I work the more luck I seem to have

  *–Thomas Jefferson.*
- The artist is nothing without the gift, but the gift is nothing without word

  *–Emile Zola.*
- Not everything that can be counted counts and not everything that counts can be counted

  *–Albert Einstein.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- When fools become patriots, the intellects become unsafe
  — *Bernard Shaw.*
- Pull the string, and it will follow wherever you wish. Push it, and it will go nowhere at all
  — *Dwight Eisenhower.*
- I never worry about action, but only about inaction
  — *Winston Churchill.*
- Kindness is a language which the deaf can hear and the blind can see
  — *Mark Twain.*
- The man who removes a mountain begins by carrying away small stones
  — *William Faulkner.*
- Accept responsibility for your life. Know that it is you who will get you where you want to go. No one else
  — *Les Brown.*
- Let no one ever come to you without leaving happier
  — *Mother Teresa.*
- Don't compare your beginning to someone else's middle
  — *Jon Acuff.*
- I knew all the rules but the rules did not know me
  — *Eddie Vedder.*
- The most important trip you may take in life is meeting people half way
  — *Boye*
- No man can think clearly when his fists are clenched
  — *George Jean Nathan.*
- Worry does not empty of tomorrow of its sorrow, it empties today of its strength
  — *Corrie ten Boom.*
- Make the best use of what is in your power, and take the rest as it happens
  — *Epictetus.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Well-times silence hath more eloquence than speech

  ***–Martin Fraquhar Tupper.***

- If you can't get rid of the skeleton in your closet you'd best teach it to dance

  ***– George Bernard Shaw.***

- Problems worthy of attack prove their worth b y fighting back

  ***– Paul Erdos.***

- Pull the string and it will follow wherever you wish. Push it, and it will go nowhere at all

  ***– Dwight Eisenhower.***

- Kindness is a language which the deaf can hear and the blind can see

  ***– Mark Twain.***

- Most people do not listen with the intent to understand; they listen with the intent to reply

  ***- Stephen R.Covey.***

- What's the point of being alive if you don't at least try to do something remarkable

  ***– Unknown.***

- The meaning of life is to find your gift. The purpose of life is to give it away

  ***– Unknown.***

- The year you were born marks only your entry into the world. Other years where you prove your worth, they are the ones worth celebrating

  ***– J.Kintz.andhi.***

- Many of the truths we cling to depend greatly on our point of view

  ***-Obi-wan Kenobi.***

- I don't measure a man's success by how high he climbs but how high he bounces when he hits bottom

  ***– George Patton.***

- You will be surprised to know how far you can go from the point where you thought it was the end ***– unknown.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது இறுதி பிறந்தநாளின் போது மனைவி , மகள் மற்றும் பேரனுடன்















தென்னாடு திங்கள் இதழ் வெளியீட்டில்
கலந்து கொண்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக் காலங்களில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது"*

எமது குடும்பத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர். கந்தையா பத்மநேசன் அவர்கள் திடீர் நோயுற்ற போது வைத்தியசாலையில் அவருக்கு நேரகாலம் பாராது உடனிருந்து மருத்துவ உதவிகளை இறுதிவரை செய்து எங்களுக்கு மன அமைதியை ஏற்படுத்திய மருமக்களான மருத்துவர் அர்ஜுன், மருத்துவர் அகல்யன், பெறாமகளான மருத்துவர் பிரியவதனி மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும்,

மருத்துவமனையில் எம்முடன் உடனிருந்து உதவிகள் செய்த பெறாமகன் மதன்மோகன், மருமகன் பிரதீபன், ஒன்றுவிட்ட சகோதரி றுவானி, மைத்துனர்களான இராமச்சந்திரன், சிவதாசன் (GS) மற்றும் ஜெகதீசன் நண்பர்களான சந்திரகுமார், தில்லைநாதன், பிரேமராஜன், இலட்சுமணசர்மா மற்றும் பல அன்புள்ளங்களுக்கும்,

இறைபதம் அடைந்த வேளை வருகை தந்து, துயர் துடைத்து, ஆறுதல்கூறித் தேற்றிய, அன்புள்ளங்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக இதய அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும், மலர்வளையம், மலர்மாலை மற்றும் பதாகைகள் வைத்து அஞ்சலி செய்தோருக்கும், பல்வேறு உதவிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உணர்வுடன் ஆற்றியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை வழிநடத்திய செந்தமிழாகம அருச்சுனைஞர்களுக்கும் மற்றும் கொட்டடி சிவகுமார் ஐயா அவர்களுக்கும், இரங்கலுரை ஆற்றிய அன்பர்களுக்கும் திருவுடல் பேழையை மயானம் வரை சுமந்து சென்ற அன்புள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலத்திலும், தகனக்கிரியையிலும் கலந்து கொண்ட அன்பர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த செல்வராசா - சுதா குடும்பத்தினர் , குருபரன் , தென்னாடு சிவமட பொறுப்பாளர்களான சிவானந்தராஜா , நிலவன் ஆகியோருக்கும் நினைவு மலருக்கு ஆக்கங்களை எழுதியோருக்கும் அதனை தொகுத்துதவிய திரு.நடராஜா அவர்களுக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த குரு பிறிண்டேர்ஸ் அச்சகத்தாருக்கும் திருவடிப்பேற்று வழிபாடுகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டோருக்கும் மேலும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றியுடன்

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிவத்திரு.கந்தையா பத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்மநேசன் அவர்களின் வம்ச விருட்சம்




* அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசிவ

சிவத்திரு. கந்தையா பத்மநேசன் அவர்களின் திருவடிப்பேறின் நினைவாக, தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினால், **"விதிமாற்றும் விரிசடையான்"** என்ற தலைப்பில், விரிசடையான் துணைகொண்டு விதியை வெல்லலாம் என்று திருஞானசம்பந்த சுவாமிகளால் ஆணையாகச் சொல்லப்படுகின்ற திருப்பதிகங்களுடன் மற்றையதோர் தெய்வத் திருநூலானது, மார்கழித் திங்கள் 1ம் நாள் (16.12.2022) வெள்ளிக்கிழமை அன்று தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் வெளியிடப்பெறுகிறது. எனவே அந்நூலையும் படித்து திருவருள் பெற்று உய்வோமாக. அத்திருப்பதிகங்கள் வருமாறு.

- ❖ கல்வியில் மேன்மையுற்று உயர்நிலை அடைவதற்கு ஓதவேண்டிய "சுற்றமொடு பற்று அவை" திருக்கருப் பறியலூர்த் திருப்பதிகம்
- ❖ உணவும் உடையும் குறைவின்றிக் கிடைப்பதற்கு ஓதவேண்டிய "தம்மையே புகழ்ந்து திருப்புகலூர்த் திருப்பதிகம்
- ❖ எடுத்த காரியங்களில் வெற்றி பெற, செய்வினைகள் அகல ஓதவேண்டிய "அவ்வினைக்கு இவ்வினை ஆம்" திரு நீலகண்டப் பதிகம்
- ❖ குடும்பக் குழப்பங்கள் நீங்கி அன்பும் அமைதியும் பெற ஓதவேண்டிய "மண்ணில் நல்லவண்ணம்" திருக்கழுமலத் திருப்பதிகம்
- ❖ திக்குவாய் மாறிச் சீர்பெறவும் சிறந்த பேச்சாளர் ஆகவும் ஓதவேண்டிய திருவாசகம் "பூசுவதும் வெண்ணீறு"
- ❖ பணம் பெருகுவதற்கும் வறுமை நீங்குவதற்கும் ஓதவேண்டிய "இடரினும் தளரினும்" திருவாவடுதுறை திருப்பதிகம்
- ❖ பிள்ளைச் செல்வம் கிடைக்கப் பெறுவதற்கு ஓதவேண்டிய "கண்காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும் " திருவெண்காட்டுத் திருப்பதிகம்
- ❖ இராகு கேது குற்றம் நீங்கி விரைவில் திருமணம் நடக்க ஓதவேண்டிய "சடையாய் எனுமால்" திருமருகல் திருப்பதிகம்
- ❖ ஆயுள் பலம் பெருகவும், கோள்களின் தாக்கங்கள் நீங்கவும் ஓதவேண்டிய"வேயுறு தோளி பங்கன்" கோளறு திருப்பதிகம்
- ❖ ஆயுள் முழுவதும் எந்தவிதக் குறையும் இன்றி வாழ்வாங்கு வாழ்வதற்கு ஓதவேண்டிய "துஞ்சலும் துஞ்சல் இல்லாத" சீர்காழித் திருப்பதிகம்
- ❖ கடன் தொல்லைகள் நீங்க கடன் பெறாமலே செல்வச் செழிப்புடன் வாழ ஓதவேண்டிய "வேத வேள்வியை" ஆலவாய் திருப்பதிகம்
- ❖ இரத்த அழுத்தம் நீரிழிவு நீங்க போதை அடிமையில் விடுபட ஓதவேண்டிய"துணிவளர் திங்கள்" பாச்சிலாச்சிரம பதிகம்
- ❖ தடைப்படும் திருமணம் விரைவில் நடக்க ஓதவேண்டிய "நீறுவரி ஆடுஅரவொடு ஆமை மனவு" திருவேதிகுடி திருப்பதிகம்
- ❖ மணஉறவு முழு நிறைவுடன் நடைபெற கணவன் மனைவி ஒற்றுமையாக வாழ ஓதவேண்டிய "அயில் ஆரும்" திருமணஞ்சேரிப் பதிகம்
- ❖ வீண் பழி அவமானங்களிலிருந்து விடுபட தடைகளை வெல்ல ஓதவேண்டிய "மறை உடையாய்" திருநெடுங்களத் திருப்பதிகம்
- ❖ இழந்த பொருளை மீட்டுப் பெறுவதற்கு, ஓதவேண்டிய "பொன்செய்த மேனியினீர்" திருமுதுகுன்றத் திருப்பதிகம்
- ❖ செய்யும் தொழிலில் வெற்றி பெறுவதற்கும், மூத்த சகோதரர்கள் வளமுடன் வாழ்வதற்கும் ஓதவேண்டிய "வாசி தீரவே, காசு நல்குவீர்" திருவீழிமிழலை திருப்பதிகம்
- ❖ பிறவிப் பிணி நீங்க இறையுணர்வு பெருக வீண் செலவுகள் குறைய ஓதவேண்டிய "காதல் ஆகி கசிந்து" நமச்சிவாயத் திருப்பதிகம்




"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
திருச்சிற்றம்பலம்

Guru Printers - 021 221 4777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org